வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer - மணிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 23.08.2025 சனிக்கிழமை இதழ் : 235 பக்கங்கள் : 12

# முன்னாள் ஜனாதிபதி ரணில் கைது!

## 26ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவு



கொழும்பு, ஓக. 23

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினரால் நேற்றுக் கைது செய்யப்பட்ட முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட நிலையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டுப் பயணத்தின்போது அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வெள்ளிக்கிழமை மதியம் குற்றப் புலனாய்வுத் 11

## சட்டம் சகலருக்கும் சமமாக செயல்படும்!

அமைச்சர் ஆனந்த விஜேபால

கொழும்பு, ஓக. 23

தற்போதைய அரசாங்கம் சட்டத்தின் ஆட்சியை உறுதி செய்வதால் பதவியைப் பொருட்படுத்தாமல் சட்டம் அனைவருக்கும் சமமாக செயல்படுத்தப் படும் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். 11

# பயங்கரவாத தடைச் சட்டம் செப்ரெம்பரில் நீக்கப்படும்!

## சபையில் அறிவித்தார் அமைச்சர் விஜித ஹேரத்



கொழும்பு, ஓகஸ்ட் 23

**பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கான சட்டமூலத்தை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முதற்பகுதிக்குள் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.**

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தில் வாழும் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் மனித உரிமைப் பிரச்னைகள் தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் நேற்று பாராளுமன்றில் முன்வைக்கப் பட்டது.

இந்த விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை வலியுறுத்தும் வரை அல்லாமல், எமது கொள்கை பிரகடனத்தில் கூறியதைப் போன்று பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

அது தொடர்பில் ஆராய அரசாங்கம் ஆட்சியமைத்து 11

## வடக்கு மாகாணக் கல்வியில் விரைவான மாற்றம் வேண்டும்

ஆளுநர் வேதநாயகன் வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 23

எமது மாகாணத்தில் கல்வியில் மாற்றத்தை விரைவாக ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் சேர்த்து எங்கள் அனைவருக்கும் உள்ளது. ஒவ்வொருவரும் அர்ப்பணிப்பாக அதற்காக செயலாற்ற வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார 11

## யாழில் வீட்டு வளவொன்றில் பெருமளவு ஆயுதங்கள் மீட்பு!





- த.பிரதீபன், பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணத்தில் வீடொன்றின் வளவில் இருந்து நேற்று பெருமளவு ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

கொட்டடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் மலசலகூடத்துக்கு குழி வெட்டியபோது, சந்தேகத்துக்கு இடமான பொதி காணப்பட்டமையால், அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

பொலிஸார் வந்து பொதியைப் பார்வையிட்ட பின்னர், அது தொடர்பில் யாழ்.நீதிவான் நீதிமன்றுக்கு அறிவித்து, அகழ்வுப் பணிக்கு அனுமதி பெற்றனர்.

இந்நிலையில் நேற்று வெள்ளிக்கிழமை நீத வான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப் பட்டு பொதிகள் மீட்கப்பட்டன. குறித்த பொதிகளில் இருந்து ரி-56 ரக 11

## தையிட்டி பிரச்னைக்கு சுமுகமான தீர்வு வரும்!

அமைச்சர் சந்திரசேகர்

கொழும்பு, ஓக. 23

தையிட்டி பிரச்னையை சுமுகமான முறையில் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்தே தீருவோம் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இன்னும் ஓரிரு மாதங்களில் அந்த பிரச்னைக்கு அரசாங்கம் முற்றுப்புள்ளி வைக்கும் என நேற்று பாராளுமன்றில் உரையாற்றிய போது அமைச்சர் தெரிவித்தார். (அ)

## தமிழரின் இறையாண்மையை பறித்து சிங்களவரிடம் கொடுத்த ஆங்கிலேயர்!

சபையில் சுட்டிக்காட்டினார் சிறீதரன் எம்.பி.



கொழும்பு, ஓக. 23

ஆங்கிலேயர்களும் போர்த்துகீசர்களும் தமிழர்களிடம் இருந்து இறையாண்மையை பறித்து சிங்களவர்களிடம் கொடுத்துவிட்டு சென்றுவிட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றல் நேற்று சபை ஒத்திவைப்புப் பிரேரணையை முன்வைத்து உரையாற்றிய போது அவர் இதனை தெரிவித்தார். 11

## காலில் வீக்கத்துக்கு சிகிச்சை பெற்ற பூநகரி இளம் குடும்பப் பெண் மரணம்!

யாழ்ப்பாணம், ஓக. 23

காலில் ஏற்பட்ட வீக்கத்துக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண் ஒருவர் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார். பூநகரி - ஆலங்கேணி பகுதியைச் சேர்ந்த கௌதமன் தமிழ்நிலா (வயது-24) என்ற ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவருக்கு கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் வலது காலில் வீக்கம் ஏற்பட்டு அதற்கு சிகிச்சை பெற்ற நிலையில் குணமடைந்துள்ளது. 11

## செம்மணி வழக்கு 25ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாணம் - செம்மணி, சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 25ஆம் திகதிக்கு ஒத்திவைக் கப்பட்டுள்ளது. 11

## இன்றைய சூழ்நிலை காரணமாகவே தமிழர் சமஷ்டியை கோருகின்றனர்

சபையில் கூறினார் ரவிகரன் எம்.பி.

கொழும்பு, ஓக. 23

தமிழ்மக்கள் தமிழீழத்தை அடைவதற்கே விரும்புகின்றனர். தற்போதுள்ள சூழ்நிலை காரணமாகவே சமஷ்டியை எமது தமிழ் மக்கள் கோருகின்றார்கள் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனால் முன்வைக்கப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான பிரேரணையில் 11

## சந்நிதியானுக்கு இன்று கொடி!

வடமராட்சி, ஓக. 23

சரித்திரப் பிரசித்தி பெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக வுள்ளது.

தொடர்ந்து 16 11


**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




# தீர்த்தமாடினான் நல்லூர் கந்தன்....
















சரித்திர பிரசித்தி பெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலயத்தின் நேற்றைய தீர்த்தத் திருவிழாவில் பதிவான காட்சிகள் இவை...!
(படங்கள் : ஐ.சிவசாந்தன்)





## தேசிக்காய் கரைசல் என சிற்றிக் அமிலத்தை விற்பனை செய்தவருக்கு 90 ஆயிரம் தண்டம்!

யாழ்ப்பாணம், ஒக. 23

சிற்றிக் அமிலம் கரைசலை தேசிக்காய் கரைசல் என விற்பனை செய்த நிறுவனத்திற்கு 90 ஆயிரம் ரூபாய் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் பகுதிகளில் உள்ள உணவகங்கள், பழக்கடைகள் என்பவற்றுக்கு தேசிக்காய் கரைசல் என கூறி அதற்கான துண்டு சீட்டுக்களும் ஒட்டப்பட்டு சிற்றிக் அமிலக் கரைசலை 4 லீற்றர் கொள்கலன்களில் நிறுவனம் ஒன்று விற்பனை செய்து வந்துள்ளது.

குறித்த நிறுவனத்தின் விற்பனை வாகனத்தை வழிமறித்து சோதனையிட்ட சண்டிலிப்பாய் பொது சுகாதாரப் பரிசோதகர் செபமாலை பிறின்சன், அவற்றில் இருந்து தேசிக்காய் கரைசல் என விற்பனை செய்யப்பட்டு வந்த சிற்றிக் அமிலக் கொள்கலன்களை மீட்டு நிறுவனத்துக்கு எதிராக மல்லாகம் நீதவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தார்.

அதனை அடுத்து தேசிக்காய் கரைசல் என விற்பனை செய்யப்பட்ட சிற்றிக் அமிலக் கொள்கலன்களை அரச பகுப்பாய்வுக்கு அனுப்பி அறிக்கை பெறுமாறு மன்று பணித்தது.

பகுப்பாய்வு அறிக்கையில் , அவ்கரைசல் தனியே சிற்றிக் அமிலம் என்பதுடன் கிருமித் தொற்றுடனும் மனித பாவனைக்கு உகந்ததல்லாததாகவும் இருந்தாக குறிப்பிடப்பட்டிருந்தது.

அந்நிலையில் குறித்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக் கிழமை மல்லாகம் நீதவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்டபோது, குறித்த நிறுவன உரிமையாளரை கடுமையாக எச்சரித்த மன்று , அவருக்கு 90 ஆயிரம் ரூபாய் தண்டம் விதித்தது.

(அ)

## நல்லூர் ஆலய திருவிழாவில் சங்கிலி அறுத்த இளம் யுவதி!

### மடக்கிப்பிடித்தனர் சாரணர்கள்

யாழ்ப்பாணம், ஒக. 23

நல்லூர் தேர்திருவிழாவின் போது நகைகளை திருடிய யுவதி ஒருவரை ஆலயச் சூழலில் கடமையில் சாரணர்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நல்லூர் ஆலய தேர்திருவிழா நேற்று முன்தினம் வியாழக் கிழமை இடம்பெற்றது. அதன் போது யுவதி ஒருவர் பக்தர்களுக்கு இடையில் சந்தேகத்துக்கு இடமான முறையில் நடமாடிய வேளை, அதனை அப்பகுதியில் இருந்த சாரணர்கள் தொடர்ந்து அவதானித்துள்ளனர்.

அதன்போது குறித்த யுவதி ஒரு பெண்ணிடம் சங்கிலி அறுக்க முற்பட்டவேளை சாரணர்கள் மடக்கிப் பிடித்துள்ளனர்.

பின்னர் அப்பகுதியில் இருந்த பொலிஸாரிடம் யுவதி ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் யுவதியை அழைத்துச் சென்று சோதனை செய்த போது அவரது உடைமையில் இருந்து மூன்று தங்கச் சங்கிலிகள் மீட்கப்பட்டுள்ளன.

இதனை அடுத்து யுவதியைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தவேளை யுவதி கொச்சிக்கடைப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவர் எனவும் அவருடன் மேலும் சில நபர்கள் நல்லூர் ஆலயத்துக்கு வந்திருந்ததாகவும் தெரியவந்துள்ளது.

இதன் அடிப்படையில் யுவதியுடன் வந்த ஏனையவர்கள் தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். அத்துடன் யுவதியின் நடவடிக்கைகளை அவதானித்து அவரை கையும் களவுமாக பிடித்து ஒப்படைத்த சாரணர்களுக்கும் பொலிஸார் தமது பாராட்டுகளை தெரிவித்துள்ளனர்.

(அ)

## கிளிநொச்சியில் 2 சந்தேகநபர்கள் கைது!

கிளிநொச்சி, ஒக. 23

கிளிநொச்சி - தர்மபுரம் பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட புளியம்பொக்கனை துவரை ஆறு பகுதியில் சட்டவிரோதமான முறையில் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்ட இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தர்மபுரம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடமிந்து 110 லீற்றர் கசிப்பும், 524 லீற்றர் கோடாவும் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரையும் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தர்மபுரம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

(அ)

## வடமராட்சியில் கைக்குண்டு மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக. 23

வடமராட்சி கிழக்கு மாமுனை பகுதியில் கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் பிற்பகல் 1:30 மணியளவில் பதிவாகியுள்ளது.

மாமுனை கடற்கரை பகுதியில் கைக்குண்டு ஒன்று இருப்பதாக கடற்படையினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், மீட்கப்பட்ட கைக்குண்டை கடற்படையினர் மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
23.08.2025 சனிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 07

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணில் கைது!

சா்வதேச ரீதியில் அறியப்பட்ட இலங்கை அரசியல் தலைவரும், தென்னிலங்கையின் ஆளுமைமிக்க அரசியல்வாதியாகவும் கருதப்படும் ரணில் விக்கிரமசிங்க குற்றப் புலனாய்வு திணைக்களத்தால் கைதுசெய்யப்பட்டு, நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றாா். இந்த ஆரிசியா் தலையங்கள் எழுதப்படும் வரையில் இதுதான் நிலைமை.

ரணில் போன்ற ஒருவரை கைது செய்வது சாதாரண விடயமல்ல. ஆனால், அது நடந்திருக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பொறுத்தவரையில், தாங்கள் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிக்கு அமைவாக அனைத்தையும் முன்னெடுக்கின்றோம் - சட்டத்திற்கு முன்னால் அனைவரும் சமம் என்னும் வகையில் குற்றங்கள் புரிந்த அனைவா் மீதும் விசாரணைகளை மேற்கொள்வோம் என்னும் செய்தியை நாட்டு மக்களுக்கு வழங்கியிருக்கின்றது. ஒரு வேளை சாதாரண மக்கள் இவ்வாறான நடவடிக்கைகளை ஆதரிக்கலாம்; பாராட்டலாம். ஏனெனில் கடந்த காலத்தில் சக்திவாய்ந்த எவரையும் அரசாங்கங்கள் நெருங்கியதில்லை.

ரணில் விக்கிரமசிங்கவின் கைது இன்னும் சில சக்திவாய்ந்தவா்கள் மீதான கைதுக்கான ஒத்திகையாகக் கூட இருக்கலாம். ஒரு வேளை அடுத்தது மகிந்த ராஜபக்ஷ அல்லது கோட்டாபய ராஜபக்ஷவாகவும் இருக்கலாம். ஆனால், ஒரு வேளை ராஜபக்ஷக்கள் குறிப்பாக மகிந்த அல்லது கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்பட்டால் கொழும்பில் தற்போது காணப்படும் அமைதி நிலைமை காணப்படுமா என்னும் கேள்வியும் உண்டு.

ரணிலின் ஆதரவாளா்கள் கோபமடைந்திருப்பாா்கள். ஆனால், ரணிலுக்காக வீதியில் இறங்குமளவிற்கு அவா்கள் துணியமாட்டாா்கள். ஆனால், மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளா்கள் அதற்கு துணிவாா்கள். எனினும், ஜனாதிபதி அநுரவின் தலைமையில், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டுடன் இருந்தால், அவ்வாறான கைதுகள் சாத்தியமில்லை என்றும் கூறி விட முடியாது. அது சாத்தியம்தான்.

ரணில் அடிப்படையில் தந்திர அரசியல்வாதியே தவிர, அவரை எவரும் ஊழல்வாதியென்று கூறத் துணியமாட்டாா்கள். ஆனால், தற்போது அரசாங்க நிதியை தவறாக பயன்படுத்தினாா் என்னுமடிப்படையிலான குற்றச்சாட்டின் கீழ்தான், அவரது கைது நிகழ்ந்திருக்கின்றது. இனி ரணிலுக்கு ஓர் அரசியல் வாழ்வு இருக்குமா என்பது கேள்வியே. ஆனால், அரசியலில் எப்போதும் அதிசயங்களுக்கு பேர் போன இலங்கையில் அனைத்தும் சாத்தியம்தான். அநுர ஜனாதிபதியானதிலிருந்து, தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களை பெற்று அரிய பெரும்பான்மைப் பலத்தை பெற்றுக் கொண்டமை வரையில் அனைத்துமே அரசியல் அதிசயங்கள்தான்.

ஆனால், தேசிய மக்கள் சக்தி தன்னிடமுள்ள பெரும்பான்மை பலத்தைக் கொண்டு செய்வதற்கு கடினமான விடயங்களை செய்து முடிக்குமாயின், அவா்களை அண்மைக்காலத்தில் தோற்கடிக்க முடியாது. நீண்ட காலத்திற்கு அவா்களின் ஆட்சி தொடரவும் வாய்ப்புண்டு. ஆனாலும், இவைகள் ஆருடங்களுக்கு அப்பாற்றபட்டவை. ஏனெனில், இலங்கைத் தீவின் அரசியல் எப்போதுமே ஆருடங்களுக்குள் அகப்படுவதில்லை.

# செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணை வேண்டும்

## ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

முல்லைத்தீவு, ஓக. 23

செம்மணி, சிந்துபாத்தி மனிதப்புதைகுழி விவகாரத்துக்கு எந்தவித தலையீடுகளற்ற சுயாதீன சர்வதேச நீதிவிசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வலியுறுத்தினார்.

அத்தகைய சர்வதேச நீதி விசாரணைகளின்போது லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவின் சாட்சியங்களும் பெறப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தினார்.

செம்மணி மனித புதைகுழியில் இனங்காணப்பட்ட 147 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகளில் 90 வீதத்துக்கும் அதிகமானவை நிர்வாணமாக்கப்பட்டுப் புதைக்கப்பட்டவையென கடந்த 14ஆம் திகதி சட்டவைத்திய அதிகாரியால் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை சுட்டிக் காட்டுவதாகவும் இதன்மூலம் இங்கு பாரிய குற்றச்செயல்கள் இடம்பெற்றுள்ளமை அம்பலமாகுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

செம்மணி சிந்துபாத்தி மனிதப் புதைகுழி அகழ்வாய்வில் சர்வதேச கண்காணிப்பு அவசியமென்பதை வலியுறுத்துவதுடன், சர்வதேச நிபுணத்துவம் பின்பற்றப்பட்டு அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

அத்துடன், செம்மணி அகழ்வாய்வுப்பணிகளுக்குரிய தொழில்நுட்பம்சார் நிபுணத்துவத்தை வழங்குவது தொடர்பாக ஆராய்ந்து வருவதாக பிரித்தானியாவின் வெளியுறவு மற்றும் அபிவிருத்தி விவகார இராஜாங்க செயலாளர் டேவிட் லமி அண்மையில் தெரிவித்துள்ளார் எனவும் துரைராசா ரவிகரன் எம்.பி. குறிப்பிட்டார்.

(அ)

# மாங்குளத்தில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கி வந்த உணவகங்களுக்கு சீல்!

முல்லைத்தீவு, ஓக. 23

முல்லைத்தீவு மாங்குளம் பொது சுகாதார பிரிவில் உள்ள உணவகங்கள் மற்றும் பல் பொருள் வணிகங்கள் மீது, பொது சுகாதார பரிசோதகர்களால் மேற்கொள்ளப்பட்ட திடீர் பரிசோதனையில் சுகாதார சீர்கேட்டுடன் இயங்கிய உணவகங்கள் மற்றும் கடைகளுக்கு தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், உணவகங்களுக்கும் சீல் வைக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட ஒட்டுசுட்டான், முத்தையன்கட்டு, மாங்குளம் பொது சுகாதார பிரிவில் உள்ள உணவகங்கள் மற்றும் பல் பொருள் வணிகங்கள் மீது, கடந்த 6 ஆம் திகதி திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, நுகர்வுக்கு பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டதுடன் நேற்று முன் தினம் மாங்குளம் மேலதிக நீதவான் நீதிமன்றில், உணவகங்கள் மற்றும் கடை உரிமையாளர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

இதனால், குற்றத்தை ஒப்புக்கொண்ட கடை உரிமையாளர்களுக்கு மொத்தமாக 2 இலட்சத்து 40 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.

அத்துடன், மாங்குளம் பகுதியில் உள்ள இரண்டு கடைகளுக்கு சீல் வைக்கப்பட்டது.

(அ)

# 14 யாழ். பாடசாலைகளின் மாணவர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு நேரில் விஜயம்

யாழ்ப்பாணம், ஓக. 23

யாழ்ப்பாண கல்வி வலயத்தின் மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகள் குழு உட்பட யாழ்ப்பாணத்தின் 14 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு, அண்மையில் ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்படும் 'விஷன்' நிகழ்ச்சியில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்தது.

ஜனாதிபதி அலுவலகம், கல்வி அமைச்சு மற்றும் பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு ஆகியவை இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக இந்த திட்டத்தை செயல்படுத்துகின்றன. யாழ்ப்பாண வலய மாணவர் பாராளுமன்ற பிரதிநிதிகள் ஜனாதிபதி அலுவலகத்திற்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவையாகும்.


மாணவர் பாராளுமன்றம் என்ற எண்ணக்கரு, பாடசாலைகள் ஊடாக தேசிய நல்லிணக்கம் மற்றும் சகவாழ்வை உருவாக்குவதற்கும், அது குறித்த ஒரு கருத்தாடலைக் கட்டியெழுப்பவும் பங்களிக்கிறது.

இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு 'கிளீன் சிறீலங்கா' வேலைத்திட்டம் மற்றும் அதன் கருத்தியல் பெறுமதி குறித்து தெளிவுபடுத்தப்பட்டது.


இந்த நிகழ்ச்சியுடன் இணைந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பின் முக்கியத்துவத்தை குறிக்கும் வகையில் அடையாள ரீதியான பரிசாக பெறுமதியான மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் பிரசன்ன சந்தித், ஜனாதிபதி அலுவலகத்தின் முப்படை ஒருங்கிணைப்பு பிரிவின் உதவிப் பணிப்பாளர் மேஜர் நதீக தங்கொல்ல ஆகியோருடன் குறித்த பாடசாலைகளின் அதிபர்கள், கல்லூரிகளின் ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பலர் இந்த நிகழ்வில் இணைந்து கொண்டனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டாகும். பழைய இனிய சம்பவங்கள் அனைத்தும் நினைவுக்கு வரும். எதிர்ப்புகள் அடங்கும். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தாரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். உறவினர்கள் வீடு தேடிவருவார்கள். அரசால் ஆதாயம் உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**மிதுனம்**
உற்சாகமாக எதையும் முன்னின்று செய்வீர்கள். பிள்ளைகளின் பிடிவாதம் தளரும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். பழைய பிரச்னைகள் தீரும்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை பகைத்துக் கொள்ளாதீர்கள்.

**சிம்மம்**
விலை உயர்ந்த பொருட்களை கவனமாக கையாளுங்கள். கணவன்-மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். உடல் அசதி சோர்வு வந்து விலகும். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கன்னி**
பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். கடனில் ஒரு பகுதியை பைசல் செய்வீர்கள். புதிய கோணத்தில் யோசித்து பழைய பிரச்னைகளுக்கு தீர்வு காண்பீர்கள். சிறப்பான நாள்.

**துலாம்**
உறவினர்கள் நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். மற்றவர்களுக்காக சில பொறுப்புகளை ஏற்பீர்கள். நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். வியாபாரத்தை பெருக்குவீர்கள்.

**விருச்சிகம்**
கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வியாபாரத் தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் உங்கள் அறியாமலே ஒருவித படபடப்பு தாழ்வுமனப்பான்மை வந்து செல்லும். வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள்.

**மகரம்**
மனைவி வழியில் அனுகூலம் உண்டு. புதியவரின் நட்பால் உற்சாகமடைவீர்கள். வாகனத்தை சீர் செய்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கும்பம்**
விஐபிகள் அறிமுகமாவார்கள். அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பழைய உறவினர் நண்பர்கள் தேடி வந்து பேசுவார்கள்.

**மீனம்**
நட்பு வட்டம் விரியும். நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள்.

# உண்மைக்கு புறம்பான செய்திகளை யாரும் பெரிதுபடுத்த தேவையில்லை

## யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் பிரதீபன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 23

சமூக வலைத்தளங்களில் வரும் உண்மைக்குப் புறம்பான செய்திகளை யாரும் பெரிதுபடுத்த தேவையில்லை என்று யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் சமூக வலைத்தளத்தில் பகிரப்பட்ட பதிவு தொடர்பாக நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடினர்.

இதன்போது, நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் அரசாங்க அதிபரிடம் தெரிவிக்கையில், கடல்பிரயாணம் மூலம் நெடுந்தீவு சென்று கடமையாற்றும் அனைத்துத் தர உத்தியோகத்தர்களையும் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே கடமையாற்றுவதாக சமூக வலைத்தளங்களில் குறிப்பிடுவது மிகுந்த மன வேதனைக்குரிய விடயமாகும். நாம் விரக்தி நிலையில் இருப்பதாகவும் அச்செய்தி உண்மைக்கு புறம்பானது எனவும் உத்தியோகத்தர்கள் கூறினர்.

மேலும், பிரதேச செயலாளர் ஒரு பெண்ணாக இருக்கின்ற போதிலும் கடமைக்கு ஒழுங்காக சமுகமளிப்பதுடன் அவசர நிலமைகளின் போது நெடுந்தீவிலேயே தங்கி நின்று பணியாற்றுபவர்.

மேலும், பொதுவாக தண்டனையின் பேரிலேயே நெடுந்தீவுக்கான இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதாக பரவலான கருத்து உள்ளமையும் மிகவும் வேதனைக்குரிய விடயம் என உத்தியோகத்தர்களால் தெரிவிக்கப்பட்டு உண்மைக்குப் புறம்பான செய்தி தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்க அதிபரை நேரடியாக கோரியதுடன் கோரிக்கை மனுவினையும் கையளித்தனர்.

இதன்போது கருத்து தெரிவித்த அரசாங்க அதிபர், சமூக வலைத்தளங்களில் வரும் இவ்வாறான உண்மைக்குப் புறம்பான செய்திகளை பெரிது படுத்ததேவையில்லை. குறித்த பதிவு தொடர்பில் உத்தியோகத்தர்கள் மன உளைச்சலடைய வேண்டிய அவசியமில்லை. உத்தியோகத்தர்கள் எவ்வளவு சிரமப்பட்டு நெடுந்தீவுக்கு சென்று கடமையாற்றுகின்றார்கள் என்பது எமக்கும் அங்கு வாழும் மக்களுக்கும் நன்கு தெரிந்த விடயம் என தெரிவித்தார். (எ)

# நல்லூரில் தெய்வீகத் திருக்கூட்டத் தொடர்

யாழ்ப்பாணம், ஒக. 23

நல்லூர் உற்சவகாலப் பெருந்திருவிழாவை முன்னிட்டு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் முன்னெடுக்கும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் 26ஆம் நாள் நிகழ்வு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இன்று சனிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறும்.

வேதாந்த மடம், சிறீ சிவகுருநாத பீட 8 ஆவது குருபீடாதிபதி சிறீ வேதவித்தியாசாகரர் சுவாமிகள் திருமுன்னிலை வகிக்க, மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயப் பிரதம குருக்கள் சிவசிறீ நாகேந்திர திவாகரக் குருக்களின் தலைமையில் இந்தத் திருக்கூட்ட நிகழ்வு நடைபெறும்.

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகப் பிரதம பொறியியலாளர் கதிர்காமர் திருக்குமார் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிப்பார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசனும் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் துரைரட்ணம் திலீப்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக நல்லூர் பிரதேச கிராம உத்தியோகத்தர் இராசதுரை தங்கத்துரையும் இலங்கை வங்கியின் ஓய்வுநிலைச் சிரேஷ்ட முகாமையாளர் வேலாயுதபிள்ளை ஞானோதரனும் கலந்து கொள்வர்.

கலை நிகழ்வுகளை நல்லூர் மற்றும் யாழ்ப்பாணம் பிரதேச செயலக சிறீலசிறீ ஆறுமுகநாவலர் அறநெறிப் பாடசாலை, நல்லூர் வண்ணை சிறீவிஸ்வலிங்க மகாகணபதி அறநெறிப் பாடசாலை மற்றும் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் கற்கைகள் நிறுவக மாணவர்கள் வழங்குவர்.

சிறப்பு நிகழ்வுகளாக வலிகாமம் கல்வி வலய இந்து சமய ஆசிரிய ஆலோசகர், சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் வேலும் மயிலும் என்னும் தொனிப்பொருளில் அமைந்த சொற்பொழிவு நிகழ்வும் இ. அனாமிகாவின் முருக நடன நிகழ்வும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள சிறீலசிறீ ஆறுமுகநாவலர் கற்கைகள் நிறுவக மாணவர்கள் வழங்கும் கலை நிகழ்வுகளும் ஜெயக்குமார் கார்த்திகனின் வயலின் இசை நிகழ்வும் நடைபெறும்.

மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வைத் தொடர்ந்து, நன்றியுரையை சிறீலசிறீ ஆறுமுக நாவலர் அறநெறிப் பாடசாலை ஆசிரியர் திருமதி வளர்மதி சிவகுமார் வழங்குவார்.

இந்த நிகழ்வை கண்டுகளிக்க அனைவரையும் வருமாறு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# துர்க்காதேவி மண்டபத்தில் தெய்வீக இசையரங்கு

யாழ்ப்பாணம், ஒக. 23

இலங்கை இளங்கலைஞர் மன்றம், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று மாலை 06.45 மணி தொடக்கம் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் நடைபெறும்.

கலாபூசணம் வீ. கே. பஞ்சமூர்த்தியின் ஒருங்கமைப்பில் நாதஸ்வர இசைச் சங்கமம் நடைபெறும். இதனைத் தொடர்ந்து நாட்டிய அரங்கு நடைபெறும். இதில், நாட்டிய கலா கேந்திரா மாணவர்களின் நடனம் நடைபெறும். அணி செய் கலைஞர்களாக நட்டுவாங்கம் - திருமதி துஷ்யந்தி சுகுணன், பாட்டு - அழகேசன் அமிர்தலோஜன், மிருதங்கம் - மகேந்திரன் லோகேந்திரன், வயலின் - கேதீஸ் வரன் வேலதீபன், ஒகன் - ச. றஜீவன். (ஐ)

# "பதவியுயர்வு கிடைத்த பின்பும் நெடுந்தீவில் கடமையாற்றுகிறார் பிரதேச செயலாளர்"

யாழ்ப்பாணம், ஒக. 23

நெடுந்தீவில் தற்போது கடமையாற்றும் பிரதேச செயலாளர் பதவியுயர்வு கிடைக்கப் பெற்றுள்ள போதிலும் எனது கோரிக்கையின் அடிப்படையிலேயே புதிய பிரதேச செயலாளர் கடமையை பொறுப்பேற்கும் வரையில் தொடர்ந்து கடமையாற்றி வருகின்றார் என்று யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ம. பிரதீபன் தெரிவித்தார்.

உதவி பிரதேச செயலாளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அற்ற நிலையில் அனைத்து கடமைகளையும் பிரதேச செயலாளரும் ஏனைய உத்தியோகத்தர்களும் இணைந்து எவ்வித முறைப்பாடுகளும் அற்ற நிலையில் கடமையாற்றுவதற்கு தனது பாராட்டுக்களையும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

நெடுந்தீவு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கில் மிகவும் அர்ப்பணிப்புடன் ஏனைய சிரேஷ்ட தர உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படாத சந்தர்ப்பத்திலும் பிரதேச செயலாளருடன் இணைந்து ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்கும் எனவும் தெரிவித்தார்.

நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் தொடர்பில் சமூக வலைத்தளத்தில் பகிரப்பட்ட பதிவு தொடர்பாக நெடுந்தீவு பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை நேற்று முன்தினம் மாவட்ட செயலகத்தில் சந்தித்து கலந்துரையாடினர். இதன்போதே அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு குறிப்பிட் டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவர்கள் திங்கள்முதல் வேலைநிறுத்தப் போராட்டம்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்

கொழும்பு, ஓக. 23

**சுகாதார அமைச்சின் அதிகாரிகளின் திறமையற்ற மற்றும் தன்னிச்சையான நடத்தைக்கு எதிர்ப்பு தெரிவித்தும் இடமாற்ற செயல்முறை முறையான சட்டபூர்வ முறையில் மேற்கொள்ள வேண்டும் என்று கோரியும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் திங்கட்கிழமை முதல் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளது.**

சுகாதார அமைச்சரின் உத்தரவுகளை புறக்கணித்து பயிற்சிக்கு பிந்தைய மற்றும் கடினமான சேவை வேலைவாய்ப்புகள் உள்ளிட்ட வருடாந்திர இடமாற்ற பட்டியல்களைத் தயாரிப்பதில் தன்னிச்சையாகச் செயல்படுவதாக அமைச்சு அதிகாரிகள்மீது அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றம் சாட்டியது.

சுகாதார அமைச்சர் இந்த செயல்முறையை சரிசெய்ய ஒப்புக்கொண்டதையடுத்து முந்தைய தொழிற்சங்க நடவடிக்கையைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்ததாகவும் ஆனால், அமைச்சு அதிகாரிகள் ஒப்புக் கொள்ளப்பட்ட முடிவுகளை செயல்படுத்தத் தவறிவிட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சுகாதார அமைச்சரின் உத்தரவுகளைமீறி சுகாதார அமைச்சு அதிகாரிகள் தற்போது தங்கள் சொந்த இலாபம் மற்றும் நோக்கங்களுக்காகத் தன்னிச்சையாகவும் சட்டவிரோதமாகவும் செயல்பட்டு மருத்துவ இடமாற்ற செயல்முறையையே குறைமதிப்புக்கு உட்படுத்தி நாட்டில் நோயாளர் பராமரிப்பு சேவைகளை குறைமதிப்புக்கு உட்படுத்துகின்றனர்.

இந்த அதிகாரிகளின் பொறுப்பற்ற மற்றும் திறமையற்ற செயல்களின் நோக்கம் சுகாதார அமைச்சரையும் அரசாங்கத்தையும் பொதுமக்களின் பார்வையில் சங்கடப்படுத்துவதும் அதிருப்தி அடைவதும் தான் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

சுகாதார அமைச்சர் உட்பட பொறுப்பானவர்கள் உடனடியாக தலையிட்டு சுகாதார அமைச்சு அதிகாரிகளால் செயல்படுத்தப்படும் சட்டவிரோத மற்றும் தன்னிச்சையான திட்டத்தை நிறுத்தவும் இடமாற்ற செயல்முறையின் சட்டபூர்வமான தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் செயல்திறனை உறுதி செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றும் மருத்துவ அதிகாரிகள் சங்கம் கூறியுள்ளது. (ஐ)

# வன விலங்குகள் கொல்லப்படுதை தடுப்பதற்கு சட்டத் திருத்தம் தேவை

## சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்து

கொழும்பு, ஓக. 23

வன விலங்குகள் கொல்லப்படுவதைத் தடுப்பதற்கு உடனடியாக சட்டத் திருத்தம் அவசியம் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவை வலியுறுத்தியுள்ளது இலங்கை சட்டத்தரணிகள் சங்கம்.

இது தொடர்பில், அந்த சங்கம் ஜனாதிபதிக்கு கடிதம் எழுதியுள்ளது. அந்தக் கடிதத்தில்,உலகிலேயே அதிகளவில் இலங்கையில் யானைகள் உயிரிழக்கின்றன. கடந்த ஆண்டுகளில் சிறுத்தைகள் மற்றும் பிற பாதுகாக்கப்பட்ட விலங்கினங்கள் தொடர்ந்து கொல்லப்படுகின்றன.

இலங்கையின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் நாட்டின் வளமான மற்றும் பன்முகத் தன்மை கொண்ட பாரம்பரியத்தின் ஒருங்கிணைந்த பகுதியாகும். இது எதிர்கால சந்ததியினருக்காக பாதுகாக்கப்பட வேண்டும்.

இலங்கைக்கு வருகை தரும் இலட்சக்கணக்கான வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் வளவிலங்குகளால் ஈர்க்கப்படுகின்றன. நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த விடயத்தை கருத்தில் கொண்டு தற்போதுள்ள சட்ட கட்டமைப்பில் அவசர திருத்தம் மற்றும் மறுசீரமைப்பு தேவை. விரிவான சட்ட சீர்திருத்தங்களுக்கான தனது சொந்த திட்டங்களை விரைவில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவுள்ளோம்.

இடைக்காலத்தில், குற்றவாளிகளுக்கான அபராதங்கள் மற்றும் பிற தண்டனைகளை அதிகரிக்கும் நோக்கில், தற்போதுள்ள சட்டங்களில், குறிப்பாக விலங்கினங்கள் மற்றும் தாவர பாதுகாப்பு கட்டளை சட்டத்தில் குறுகிய கால திருத்தங்களை பரிசீலிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகிறோம்.

பாதுகாக்கப்பட்ட உயிரினங்கள், குறிப்பாக யானைகள் மற்றும் சிறுத்தைகள் சட்டவிரோதமாக கொல்லப்படுவதைத் தடுக்க இத்தகைய நடவடிக்கைகள் உடனடித் தடைகளாக செயல்படும் - என்றுள்ளது. ஐ)

# பெரிய வெங்காய அறுவடை தம்புள்ளையில் ஆரம்பம்!



கொழும்பு, ஓக. 23

தம்புள்ளையில் பெரிய வெங்காய அறுவடை ஆரம்பமாகியுள்ளது. இந்த நிலையில், இறக்கமதி செய்யப்படும் பெரிய வெங்காயத்தால் தாம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

ஓகஸ்ட், செப்ரெம்பர் காலப்பகுதியில் மாத்தளை மாவட்டத்தில் தம்புள்ளை - கலேவல பிரதேசங்களை மையமாகக் கொண்டு பெரிய வெங்காய உற்பத்திகள் நடைபெறுகின்றன.

வழமைபோல் இந்த வருடமும் பெரும் விளைச்சல் கிடைத்துள்ளது.

சாதாரணமாக தற்போது தம்புள்ள பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ வெங்காயம் 90 முதல் 100 ரூபாய் உள்ளது. ஆனால், இறக்குமதியாகும் வெங்காயம் 80 முதல் 90 ரூபாய் வரை விற் பனை செய்யப்படுகிறது. இத னால் தாம் பாதிக்கப்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர். (ஐ)

# விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 23

பேருந்து ஒன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் நேருக்கு நேர் மோதிய விபத் தில் ஒருவர் உயிரிழந்தார்.

கம்பஹா - உடுகம்பொல - கொட்டுகொட வீதியில் நெத கமுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இந்த விபத்து இடம்பெற்றது.

இதில், மோட்டார் சைக்கிளில் சென்றவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் கெஹெல்பத்தர, உடுகம்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 55 வயது நபராவார். (ஐ)

# ஒன்றிணைந்த பேருந்து சேவை திங்கட்கிழமை முதல் ஆரம்பம்

## தேசிய போக்குவரத்து ஆணைக்குழு

கொழும்பு, ஓக. 23

நாளை மறுநாள் திங்கட்கிழமை நள்ளிரவு முதல் ஒன்றிணைந்த நேர அட்டவணை பேருந்து சேவையை நடைமுறைப்படுத்தும் செயல்திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன் முதல்கட்டம் கொழும்பு - புத்தளம் மார்க்கத்தில் ஆரம்பிக்கப்படும் என்று அதன் தலைவர் பொறியியலாளர் பீ. ஏ. சந்திரபால தெரிவித்துள்ளார்.

கொழும்பு - யாழ்ப்பாணம், கொழும்பு - மன்னார், கொழும்பு - குளியாபிட்டி ஆகிய மார்க்கங்களிலும் கொழும்பு, புத்தளம், அநுராதபுரம், வவுனியா, யாழ்ப்பாணம் வீதிகளிலும் ஒன்றிணைந்த நேர அட்டவணையில் பேருந்து சேவைகள் முன்னெடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை போக்குவரத்து சபை மற்றும் தேசிய போக்குவரத்து ஆணைக்குழு ஆகிய இரு நிறுவனங்களால் பொது மக்களுக்கு தனித்தனியாக வழங்கப்பட்ட சேவைகளை ஒன்றிணைத்து ஒரே கால அட்டவணையில் சேவையில் ஈடுபடுத்த இதனூடாக நடவடிக்கை எடுக்கப்படுமென தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர், பொறியியலாளர் பீ.ஏ.சந்திரபால தெரிவித்துள்ளார். (ஐ)

# பொலிஸ் மா அதிபரின் பெயரில் போலி கடிதம்!

கொழும்பு, ஓக. 23

பொலிஸ் மா அதிபர் மற்றும் பிற மூத்த அதிகாரிகளால் வெளியிடப்பட்ட அதிகார பூர்வ ஆவணம் என்று பொய்யாகக் கூறி சமூக ஊடகங்களில் பரவும் போலி கடிதம் குறித்து பொதுமக்களை எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

போலியான பெயர்கள் மற்றும் கையொப்பங்களைக் கொண்ட இந்தக் கடிதம், பொதுமக்களைத் தவறாக வழிநடத்தும் வகையில் வேண்டுமென்றே பரப்பப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நிலையில், குறித்த ஆவணத்தை உருவாக்கிப் பகிர்ந்ததற்குப் பொறுப்பானவர்களைக் கண்டறியக் கணினி குற்றப்பிரிவு விசாரணையை ஆரம்பித்துள்ளது. (ஐ)

# ஹெரோயினுடன் சந்தேகநபர் கைது

கொழும்பு, ஓக. 23

சி. ஐ. டியினரின் சுற்றிவளைப்பில் ஒரு கிலோ 175 கிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

களுத்துறை சி. ஐ. டியினர் குடா பயகல பகுதியில் நடத்திய விசேட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட இந்த சுற்றிவளைப்பில் பயாகல பகுதியைச் சேர்ந்த 44 வயது சந்தேகநபரே கைதானார். (ஐ)

# தானிய பயிர் செய்கைக்கு காப்பீட்டு திட்டம் அறிமுகம்!

கொழும்பு, ஓக. 23

நாட்டில் பயிர் செய்கை பாதிப்பை நிர்வகிக்கும் செயல்பாட்டை முறைமைப்படுத்தும் நோக்கில் தானிய செய்கைக்கான காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

விவசாயம், கால்நடை வளங்கள், காணி, நீர்ப்பாசன அமைச்சால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

உளுந்து, பச்சைப் பயறு, கௌப்பி, வேர்க்கடலை, குரக்கன், கொள்ளு, சோளம் உள்ளிட்ட பயிர்களுக்கு இந்த சலுகை காப்பீட்டுத் திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, கௌப்பி செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் ஓர் ஏக்கருக்கு 4 ஆயிரத்து 200 ரூபாய் காப்பீடு மேற்கொள்ளும்போது, இயற்கை பேரழிவுகள், நோய்கள் மற்றும் பூச்சிகளால் ஏற்படும் பாதிப்பு மற்றும் காட்டு யானைகளால் அந்த செய்கைக்கு ஏற்படும் சேதங்களுக்கு ஓர் ஏக்கருக்கு 60 ஆயிரம் ரூபாய் காப்பீட்டை பெற்றுக்கொள்ளமுடியும்.

இதுதவிர, பச்சைப்பயறு செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் ஓர் ஏக்கருக்கு 5,600 ரூபாய் காப்பீடு செய்யும் போது, ஏற்படும் பாதிப்புகளுக்கு ஓர் ஏக்கருக்கு 80 ஆயிரம் ரூபாய் இழப்பீடாக பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

காட்டு யானைகளால் அச்சுறுத்தல் உள்ள மாவட்டங்களிலும் பயிர்களுக்கு சேதம் ஏற்பட்டால் இழப்பீடு வழங்கும் நோக்கில் இந்த மானிய காப்பீட்டுத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சத்தியாகிரக போராட்டத்தில் குதித்தனர் தபால் ஊழியர்கள்



கொழும்பு, ஓக. 23

**பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த தபால் தொழிற்சங்கங்கள் நேற்று கொழும்பில் உள்ள மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையம் முன்பாக சத்தியாகிரக போராட்டத்தை ஆரம்பித்துள்ளன.**

இலங்கை ஆசிரியர் சங்கம், தொழிலாளர் போராட்ட நிலையம் உள்ளிட்ட பல தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள் இந்த சத்தியாகிரகத்தில் இணைந்துள்ளனர்.

இந்தப் போராட்டத்தால் நேற்று காலை முதல் மத்திய அஞ்சல் பரிவர்த்தனை நிலையத்தைச் சுற்றி விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

பொதிகளை அனுப்பத் தயாராகும் ஊழியர்களின் கடமைகளுக்கு சில குழுக்கள் இடையூறு விளைவித்தமையை அடுத்து, பொலிஸார் அந்த இடத்துக்கு வரவழைக்கப்பட்டனர் என்று தெரிகிறது.

19 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 17ஆம் திகதி நள்ளிரவு தொடங்கிய பணிப்புறக்கணிப்பு நேற்றும் தொடர்ந்தது. இதன் விளைவாக, பொதுமக்கள் அஞ்சல் சேவைகளை அணுகுவதில் சிரமங்களை எதிர்கொண்டனர்.

பொதுமக்களுக்கு மேலும் சிரமத்தை ஏற்படுத்தாமல் வேலைநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருமாறு அகில இலங்கை துணை அஞ்சல் ஊழியர்கள் சங்கத்தின் பொருளாளர் ரவீந்திர அமரஜீவ, சக தொழிற்சங்க பிரதிநிதிகளை வலியுறுத்தினார்.

மேலும், பணிக்கு வராத அனைத்து அஞ்சல் ஊழியர்களும் தங்கள் பதவிகளை விட்டு வெளியேறியவர்களாகக் கருதப்படுவார்கள் என்று தபால் மா அதிபர் ருவன் சத்குமார கூறியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## மயக்க மருந்து ஸ்ப்ரே இன்மையால் மருத்துவ பரிசோதனைகள் தாமதம்

கொழும்பு, ஓக. 23

மயக்க மருந்து ஸ்ப்ரே இன்மையால் மேல் செரிமான அமைப்பைப் பரிசோதிக்கப் பயன்படுத்தப்படும் மேல் இரைப்பை குடல் எண்டோஸ்கோபி சோதனைகள் பல மருத்துவமனைகளில் தாமதமாகி வருகின்றன.

இந்த மயக்க மருந்து இலங்கையில் கிடைப்பதில்லை. தற்போது சந்தையில் உள்ள தயாரிப்புக்கு தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு அனுமதி அளிக்கவில்லை.

இதன் காரணமாக நிபுணர்கள் வழக்கமான, அவசர கால நடைமுறைகளை ஒத்தி வைத்துள்ளனர்.

சில மருத்துவர்கள் தனிப்பட்ட நோயாளிகளுக்கு வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து மயக்க மருந்து ஸ்ப்ரேயை வாங்குவதற்கு முன்பதிவு செய்துள்ளதாகவும் ஆனால், பெரும்பாலான மெருத்துவமனை நடைமுறைகள் புதிய திகதிகள் இன்மையால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றன.

## தவறான தண்டவாள பாதையில் பயணித்த ரயிலால் சேவை தாமதம்!

கொழும்பு, ஓக. 23

தெமட்டகொடை ரயில் நிலையம் அருகே ரயில் ஒன்று தவறான பாதையில் சென்றதால் ஏற்பட்ட இடையூறினால், மருதானை - கொழும்பு கோட்டை இடையேயான ரயில் சேவைகள் தாமதமடைந்தன.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை 6.45 மணிக்கு மருதானையிலிருந்து காலிக்கு புறப்படவிருந்த கடுகதி இரவு தபால் ரயிலும் தாமதமாகின.

இந்த இடையூறால், மேல் மற்றும் கீழ் திசைகளில் இயங்கும் அனைத்து ரயில்களும் தாமதமாக இயங்கின. (ஐ)

## முன்னாள் சிறை அதிகாரியே பண்டாரகமவில் சுட்டுக்கொலை

கொழும்பு, ஓக. 23

நேற்று முன்தினம் களுத்துறையில் சுட்டுக் கொல்லப்பட்டவர் முன்னாள் சிறைச்சாலை அதிகாரி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் மாலை களுத்துறை - பண்டாரகம, துன்போதிய பாலம் அருகே கார் ஒன்றை இலக்கு வைத்து துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

இதில், ஒருவர் உயிரிழந்தார். கொலையானவர் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில், முன்னாள் சிறை அதிகாரியான 57 வயது நபரே சுட்டுக் கொல்லப்பட்டார் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

அவர் மீது இருவர் துப்பாக்கிச்சூட்டை நடத்தியிருந்தனர். இதற்கு ரி -56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டது. 20 தோட்டாக்கள் சுடப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தக் கொலை பழிவாங்கும் நோக்கில் இடம்பெற்றதாகக் கருதப்படுகிறது. (ஐ)

# எஸ். ரி. எவ்வுடனான மோதலில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்!

கொழும்பு, ஓக. 23

அம்பாந்தோட்டை காட்டுப் பகுதியில் விசேட அதிரடி படையினருக்கும் குற்றச் சந்தேகநபர்களுக்கும் இடையிலான மோதலில் ஒருவர் கொல்லப்பட்டார். அத்துடன், விசேட அதிரடி படையை சேர்ந்த ஒருவர் காயமடைந்துள்ளார்.

அம்பாந்தோட்டை சூரியவெவ, வெவேகம காட்டுப் பகுதியில் நேற்றைய தினம் இந்த மோதல் இடம்பெற்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார். காயமடைந்த, விசேட அதிடிப் படையை சேர்ந்த அதிகாரி சூரியவெவ மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த மோதலின்போது குற்ற சந்தேகநபர்கள் இருவர் இருந்தனர். அவர்கள் விசேட அதிரடிப் படையினர் மீது கைக்குண்டை வீசி தாக்கியுள்ளனர் என்று கூறப்படுகிறது. இதைத் தொடர்ந்து நடந்த மோதலில் குற்றச் சந்தேகநபர்களில் ஒருவர் உயிரிழந்தார். மற்றவர் தப்பிச் சென்றுள்ளார்.

இந்த சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ஐ)

## காதலியின் நிர்வாண காணொலியை பகிர்வதாக மிரட்டியவருக்கு மறியல்!

கொழும்பு, ஓக. 23

நிர்வாண காணொலியை சமூக ஊடகங்களில் பகிர்வேன் என்று காதலியை மிரட்டிய காதலனை எதிர்வரும் செப்ரெம்பர் 03ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்துக்கு அளிக்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரான காதலன் காதலியின் சம்மதத்துடன் இந்த நிர்வாண காணொலியை பதிவு செய்துள்ளார். பின்னர் அந்த காணொலியை சமூக ஊடகங்களில் வெளியிடுவேன் என்றுகூறி காதலியை வட்ஸ்அப் மூலமாக மிரட்டியுள்ளார்.

இதையடுத்து, குறித்த பெண் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளித்தார். சந்தேக நபரை கைது செய்த பொலிஸார் நீதிமன்றில் அவரை முற்படுத்தினர். இதையடுத்து, அவரை எதிர்வரும் 3ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ஐ)

## விபத்தையடுத்து தீப்பற்றியது கார்!

கொழும்பு, ஓக. 23

மத்திய அதிவேக நெடுஞ்சாலையில் 53ஆவது மைல்கல் அருகில் பாதுகாப்பு வேலியில் மோதிய கார் திடீரென தீப்பற்றி எரிந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்து புதன்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து தீயணைப்பு படையினர் மற்றும் பிரதேசவாசிகள் இணைந்து தீயை கட்டுப்படுத்தினர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)

## வடக்கு உள்ளிட்ட 4 மாகாணங்களில் 7 முதலீட்டு வலயங்கள் நிறுவப்படும்

### இலங்கை முதலீட்டு சபை

கொழும்பு, ஓக. 23



இந்த வருடத்தில் புதிதாக 7 முதலீட்டு வலயங்கள் நிறுவப்படும் என்று இலங்கை முதலீட்டு சபை தெரிவித்துள்ளது.

வடக்கு மாகாணத்தில் 3 முதலீட்டு வலயங்களும் வடமேல், கிழக்கு மற்றும் தென் மாகாணங்களில் தலா ஒரு முதலீட்டு வலயமும் நிறுவப்படவுள்ளன என்று அதன் தலைவர் அர்ஜூன ஹேரத் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், 300 ஏக்கர் பரப்பளவில் காங்கேசன்துறை முதலீட்டு வலயத்தில் ஆடை மற்றும் தகவல் தொழில்நுட்ப துறைகளில் முதலீட்டு செயல் திட்டங்கள், 200 ஏக்கர் பரப்பளவிலான பரந்தன் முதலீட்டு வலயத்தில் இரசாயன உற்பத்தி தொழிற்சாலைகள், மாங்குளத்தில் 200 ஏக்கர் பரப்பளவிலான முதலீட்டு வலயம் அமைக்கப்படவுள்ளன.

இரணவில முதலீட்டு வலயத்தில் சுற்றுலாத்துறை தொடர்பான செயல் திட்டங்கள் நிறுவப்படவுள்ளன.

மட்டக்களப்பு ஏறாவூரில் நிறுவப்படவுள்ள முதலீட்டு வலயத்தில் ஆடை உற்பத்திக்கு அவசியமான மூலப்பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலைகள் அமைக்கப்படவுள்ளன.

அம்பாந்தோட்டை முதலீட்டு வலயத்தில் மருந்து உற்பத்தி நிறுவனங்கள் நிறுவப்படவுள்ளன.

இந்த புதிய முதலீட்டு வலயங்கள் நிறுவப்படுகின்றமையுடன் பிரதேச ரீதியாக முதலீட்டு வாய்ப்புகள் அதிகரித்து அதனுடன் இணைந்த பல்வேறு வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்றும் அர்ஜூன ஹேரத் கூறினார். (ஐ)

# சுற்றிவளைப்புகளில் 5,760 பேர் கைது

கொழும்பு, ஓக. 23

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 5 ஆயிரத்து 760 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸார், விசேட அதிரடிப் படையினர், இராணுவம், கடற்படையினர் இணைந்து இந்த சுற்றிவளைப்புகளை முன்னெடுத்தனர்.

இந்த சுற்றிவளைப்புகளில் பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் ஆதாரங்களுடன் 28 பேரும், சந்தேகத்தின் பேரில் 875 பேரும், பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 424 பேரும், திறந்த பிடியாணை உத்தரவு பிறப்பிக்கப்பட்ட 273 பேரும், மதுபோதையில் வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 87 சாரதிகளும், கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை தொடர்பில் 27 சாரதிகளும், ஏனைய போக்குவரத்து விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4 ஆயிரத்து 46 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# பணவீக்கத்தை அதிகரிப்பதற்காக பண விநியோகம் விரிவாக்கப்பட்டது

## மத்திய வங்கியை விசாரிக்க வேண்டும் என்கிறார் தயாசிறி ஜயசேகர எம். பி.!

கொழும்பு, ஒக. 23

**பணவீக்கத்தை அதிகரிக்க இலங்கை மத்திய வங்கி பண விநியோகத்தை ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 790 கோடி ரூபாய் வரை விரிவுபடுத்தியுள்ளது என்று பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.**

இலங்கை மத்திய வங்கியை பாராளுமன்ற பொது நிதிக் குழுவுக்கு (கோப்) அழைக்குமாறு சபாநாயகருக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே தயாசிறி ஜயசேகர மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மேலும் அந்தக் கடிதத்தில், "பரவலாகப் பண விநியோகம் தொடர்பான வழக்கை முன்வைக்க, இலங்கை மத்திய வங்கி பொது நிதிக் குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் சம்மேளனத்தின் நிர்வாக இயக்குநர் ரஞ்சித் கீர்த்தி தென்னக்கோன் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட அறிக்கைக்கு பதிலளித்த நிதியமைச்சர் அனில் ஜெயந்த, அரசாங்கம் எந்தப் பணத்தையும் அச்சிட வில்லை என்றும் இதற்கான பொறுப்பு இலங்கை மத்திய வங்கியிடம் உள்ளது எனவும் கூறினார்.

மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சகத்திற்கும் இடையிலான மோதலே 2022ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடிக்கு அடிப்படை காரணமாகும். மத்திய வங்கி தன்னிச்சையாக பணத்தை அச்சிடுவதும் பாராளுமன்றத்தில் அரசியல்வாதிகளால் அதைப் பாதுகாப்பதும், அது திவாலாகும் வரை யாரும் அதை உணரவில்லை என்பதற்கு வழிவகுத்தது.

நிதி பிரதி அமைச்சரின் அறிக்கை, மத்திய வங்கி அந்த வகையில் செயல்பட்டு வருவதைக் குறிக்கிறது. பணவீக்கத்தை அதிகரிக்க இலங்கை வங்கி பண விநியோகத்தை ஒரு இலட்சத்து 42 ஆயிரத்து 790 கோடி ரூபாய்க்கு விரிவுபடுத்தியுள்ளது, ஆனால், பணவியல் கொள்கை அறிக்கையில் முன்னர் அறிவிக்கப்பட்ட இலக்குகள் இன்னும் எட்டப்படவில்லை.

இந்த விடயங்களை பாராளுமன்றத்துக்கும் நிலையியற் கட்டளை எண் 121 இன் கீழ் நிறுவப்பட்ட பொது நிதி குழுவுக்கும் தெரிவிப்பது மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் பொறுப்பாகும்.

அரசமைப்பின் 148ஆவது பிரிவின் கீழ் இந்த பொறுப்பு இன்றுவரை நிறைவேற்றப்படவில்லை. நிதி அமைச்சின் அல்லது அரசாங்கத்தின் கோரிக்கை இல்லாமல் மத்திய வங்கி பணத்தை அச்சிட்டிருந்தால், அமைச்சர் கூறியது போல், அது ஒரு குற்றவியல் குற்றமாகும்.

இது 2024 ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க புதிய பொருளாதார உருமாற்றச் சட்டத்தின் எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் பட்டது. பணத்தை அச்சிடுவதில் உள்ள பிரச்னை மற்றும் பணவியல் கொள்கை அறிக்கையில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளை அடையத் தவறியது குறித்து விவாதிக்க இலங்கை மத்திய வங்கியை பொது நிதிக் குழுவின் முன் அழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றுள்ளது. (ஐ)

# இலங்கை - மாலைதீவு இடையே படகு சேவையை ஆரம்பியுங்கள்

## இரு நாட்டு அரசுகளுக்கும் கோரிக்கை

-கொழும்பு, ஒக. 23

இலங்கை - மாலைதீவு இடையிலான படகு சேவை உள்ளிட்ட சுமார் 40இற்கும் மேற்பட்ட ஒப்பந்தங்கள் - பேச்சளவில் காணப்படுகின்றன. அதனைத் துரிதப்படுத்த இரு நாட்டு அரசாங்கங்களுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளோம் என்று இலங்கை, மாலைதீவு வர்த்தக சங்கத்தின் முன்னாள் தலைவர் சுதேஷ் மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை, மாலைதீவு வர்த்தக சங்கத்தின் 17ஆவது ஆண்டு பொதுக்கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

மேலும், உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலின் பின்னர் இரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், சுற்றுலாத்துறை பின்தள்ளப்பட்டது. இந்நிலையில் நாம் இலங்கை வெளிவிவகார அமைச்சர் விஜத ஹேரத்தை சந்தித்து இது குறித்து தெளிவுபடுத்தியதுடன் இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுத்தோம்.

இலங்கையின் சுற்றுலாத்துறைக்காக மாலைதீவில் இருந்து பல முதலீட்டார்களை இலங்கைக்கு வரவழைத்து ஹோட்டல் உள்ளிட்ட பல துறைகளில் முதலீடுகளை மேற்கொள்ள சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கிடையிலான படகு சேவையை ஆரம்பிக்குமாறு இரு நாட்டு அரசாங்கங்களிடம் வேண்டுகோளை விடுக்கிறேன். இது சுற்றுலாத்துறையை மேம்படுத்த மட்டுமல்லாது, வணிக நடவடிக்கைகளுக்கும் உதவியாக அமையும் - என்றார். (ஐ)

# கொலைக்கு திட்டமிட்ட நாமல் செய்திக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, ஒக. 23

நாமல் ராஜபக்ஷ எம். பி. கொலைத் திட்டத்தில் ஈடுபட்டார் என்று கூறப்படும் சமூக ஊடக செய்திக்கு எதிராகக் குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்கள் குழுவால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யூரியூப் செய்தி தளமொன்றின் மூலம் இவ்வாறான தவறான கூற்றுகள் பரப்பப்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சிறீ லங்கா பொதுஜன பெரமுன மீண்டும் அதிகாரத்துக்கு வர உதவும் வகையில் பாதாள உலகத் தொடர்புகளை பயன்படுத்தி தற்போது தடுப்புக் காவலில் உள்ள ஒருவரை கொல்ல பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ சதி செய்கிறார் என்று யூ-ரியூப் செய்தித்தளம் குற்றம்சாட்டியுள்ளது.

இந்த ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை நாங்கள் திட்டவட்டமாக நிராகரிக்கிறோம் - என்று பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது. (ஐ)

# இந்த ஆண்டில் மட்டும் 84 துப்பாக்கிச்சூடுகள்!

### - 45 பேர் பலி 50 பேர் காயம் -

கொழும்பு, ஒக. 23

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதிக்குள் நாட்டில் 84 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 45 பேர் உயிரிழந்தனர். அத்துடன், 50 பேர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகளவான துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பாதாள உலகக் கும்பல்களுக்கு இடையிலான மோதல்களே காரணம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# தீ விபத்தில் ஒருவர் பலி

கொழும்பு, ஒக. 23

கட்டுமான தொழிலாளர்கள் தங்கியிருந்த இருப்பிடத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

குருநாகல் - வில்பாவ பிரதேசத்தில் இந்தத் தீ பரவல் இடம்பெற்றது. இதில் சிக்கியே ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்தவர், வத்தேகம பிரதேசத்தைச் சேர்ந்த 36 வயது நபராவார்.

மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# மரக்கிளை முறிந்து விழுந்து பெண் ஒருவர் உயிரழப்பு!

கொழும்பு, ஒக. 23

மரக்கிளை முறிந்து விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

கொழும்பு - மாதம்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போதிசந்தியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இதில் உயிரிழந்தவர் கொழும்பு - மட்டக்குளியை சேர்ந்த 60 வயதுடைய பெண் ஆவார்.

குறித்த பெண் வீதியை சுத்தம் செய்து கொண்டிருந்த போது அவர்மீது திடீரென மரக்கிளை முறிந்து விழுந்ததில் படுகாயமடைந்து கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார். (ஐ)

# பேலியகொடை படுகொலை சந்தேநபர் கைது

கொழும்பு, ஒக. 23

கம்பஹா -பேலியகொடையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 19ஆம் திகதி மாலை இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில், களனி வெதமுல்லையை சேர்ந்த 46 வயது நபரே உயிரிழந்தவராவார்.

இந்தக் கொலை சம்பவம் தொடர்பிலேயே 24 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# சாமர சம்பத் எம்.பியிடம் 6 மணி நேரம் விசாரணை

கொழும்பு, ஒக. 23

பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்கவிடம் சுமார் 6 மணி நேரம் சி. ஐ. டியினரால் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துகள் மற்றும் உடைமைகள் தொடர்பான விசாரணை பிரிவில் அவர் முன்னிலையாகியிருந்தார்.

நண்பகல் 12.30 மணிக்கு குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையான அவர் 5.30 மணியளவில் அங்கிருந்து வெளியேறியிருந்தார். (ஐ)

-சிறப்பு அங்காடிகளில் வழங்கப்படும் -

# சொப்பிங், பிளாஸ்ரிக் பைகளுக்கு கட்டணம் அறவிடுவதற்கு திட்டம்!

கொழும்பு, ஒக. 23

சிறப்பு அங்காடிகள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்களில் வழங்கப்படும் சொப்பிங், பிளாஸ்ரிக் பைகளுக்கு மேலதிக கட்டணங்களை விதிக்கும் திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர் மு. சு உடுவாவல இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

சிறப்பு அங்காடிகள் உள்ளிட்ட வர்த்தக நிலையங்களில் அதிகளவில் சொப்பிங், பிளாஸ்ரிக் பைகள் வழங்கப்படுவதைக் குறைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் கூறியுள்ளார்.

அத்துடன், சிறப்பு அங்காடிகளில் சொப்பிங், பிளாஸ்ரிக் பைகளை இலவசமாக வழங்காமல் அவற்றுக்கு விலை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படும் -என்றும் அவர் கூறினார். (ஐ)

# கடமைக்கு சமுகமளிக்க தவறிய தபால் ஊழியர்மீது நடவடிக்கை

கொழும்பு, ஒக. 23

பணிப்புறக்கணிப்பை தொடர்ந்து கடமைகளுக்கு வராமல் இருக்கும் அஞ்சல் ஊழியர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அஞ்சல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதன்படி, அவர்களுக்கு எதிராக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

19 கோரிக்கைகளை முன்வைத்து கடந்த 17 ஆம் திகதி முதல் அஞ்சல் ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, கட்டுநாயக்கா விமான நிலைய களஞ்சியசாலையில் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள் மற்றும் பொதிகள் தேங்கியுள்ளன. இவ்வாறான நடவடிக்கைகளால் பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடு மீது இளைஞர் சமுதாயம் நம்பிக்கை கொள்ள வேண்டும்

## பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர வலியுறுத்தல்

திருகோணமலை, ஒக. 23

**ஒரு நாடு முன்னேற வேண்டுமென்றால் இளைஞர் சமுதாயம் எதிர்பார்ப்பு மற்றும் நம்பிக்கையை கொண்டிருக்க வேண்டும் என்று பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.**



கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் வழிகாட்டலுக்கமைவாக திருகோணமலை மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் உலக இளைஞர் தொழில்முனைவோர் தினத்தை முன்னிட்டு இளம் தொழில் முயற்சியாளர்களை வணிகத்துக்காக ஊக்குவித்தல் தொடர்பான நிகழ்ச்சி நடைபெற்றது.

குறித்த நிகழ்ச்சியானது திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் ஜி.எம். ஹேமந்த குமார தலைமையில் மாவட்ட செயலக புதிய ஒன்று கூடல் மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் பிரதியமைச்சருமான அருண் ஹேமச்சந்திர நிகழ்நிலை மூலம் தொடர்பு கொண்டு உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, திருகோணமலை மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் வழிகாட்டலில் தொழில் முயற்சியில் ஈடுபட்டு ஒரு குறிப்பிட்ட மட்டத்தை அடைந்து முன்னுதாரணமாக இருக்கும் இரு இளம் தொழில் முயற்சியாளர்களின் அனுபவப் பகிர்வும் நடைபெற்றது.

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான வணிகத் துறை தொடர்பான அரச நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் திட்டங்கள் குறித்து மிகவும் தெளிவாக துறைசார்ந்த அதிகாரிகளால் கலந்துரையாடப்பட்டன.

இதில், மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் எஸ். சுதாகரன், வங்கி உயரதிகாரிகள், துறைசார்ந்த அதிகாரிகள் மற்றும் இளைஞர்கள் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# இலவச மருத்துவ முகாம்

கல்முனை, ஒக. 23

கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு, அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் கல்முனை பிராந்தியத்தில் இலவச மருத்துவ முகாம் ஒன்றை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் விசேட கலந்துரையாடல் நடைபெற்றது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீனின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஜீ. திஸநாயக்க கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்டம் பொத்துவில் கோமாரி மற்றும் திருக்கோவில் பிரதேச மக்களின் நலன் கருதி தாண்டியடி பிரதேசத்தில் குறித்த மருத்துவ முகாமை நடத்துவதற்கு இதன் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ-01)

# கிழக்கு மாகாண ஆளுநர் எமிரேட்ஸ் தூதுவர் சந்திப்பு

திருகோணமலை, ஒக. 23

கிழக்கு மாகாண ஆளுநர், பேராசிரியர் ஜயந்த லால் ரத்னசேகர மற்றும் இலங்கைக்கான ஐக்கிய அரபு எமிரேட்ஸ் தூதுவர் காலித் நாசர் அல்-அமெரி ஆகியோருக்கும் இடையேயான சந்திப்பு நேற்று முன்தினம் வியாழக்கிழமை திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கையில் தற்போதைய அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுக்கு தனது பாராட்டுகளைத் தெரிவித்த தூதர், இலங்கையின் வளர்ச்சியில் முதலீடு செய்வதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து விரிவாக கலந்துரையாடினார். (எ)

# அபிவிருத்தி தொடர்பில் விழிப்புணர்வு நிகழ்வு



நிந்தவூர், ஒக. 23

நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் சட்ட அமுலாக்கம், சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளல் மற்றும் திட்டமிடல், அபிவிருத்தி தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நிந்தவூர் பிரதேச சபையின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது .

இதன்போது, அம்பாறை மாவட்டத்தில் நகர அபிவிருத்தி அதிகார சபையால் தெரிவு செய்யப்பட்ட 13 உள்ளூராட்சி நிறுவனங்களின் தவிசாளர்கள், ஆணையாளர்கள் மற்றும் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், சபைகளின் செயலாளர்கள், உறுப்பினர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், விடய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த விழிப்புணர்வு நிகழ்வை அம்பாறை மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகமும் இணைந்து நடத்தியிருந்தது. (எ)

# நீதிமன்றத்துக்கு சென்று வெளிவந்த பெண் சினிமா பாணியில் கடத்தல்

மட்டக்களப்பு, ஒக. 23

மட்டக்களப்பில் சினிமாவில் வரும் காட்சி போல நீதிமன்றத்துக்கு சென்று வெளியே வந்த பெண் ஒருவரை பெண் ஒருவர் உட்பட்ட ஒரு குழுவினர் இணைந்து அவரின் வாயை பொத்தி இழுத்துச் சென்று ஓட்டோவில் ஏற்றிய போது அவரை காப்பாற்ற சென்ற உறவினரை அடித்து கீழே தள்ளிவிட்டு பெண்ணை கடத்திச் சென்ற சம்பவம் கடந்த செவ்வாய்க் கிழமை காலையில் நீதிமன்றத்துக்கு முன்னால் உள்ள வீதியில் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

27 வயது பெண் ஒருவர் 29 வயதுடைய ஆண் ஒருவரை காதலித்து பெற்றோருக்கு தெரியாமல் கடந்த 2023 ஆம் ஆண்டு பதிவுத் திருமணம் செய்துவிட்டு தனது பெற்றோர் வீட்டில் இருந்துள்ளார். அவ்வாறே காதலன் அவரது பெற்றோர் வீட்டில் இருந்துள்ளார்.

இந்த நிலையில் சில காலங்களுக்கு பின்னர் இந்த பதிவுத் திருமணம் செய்து கொண்டது தொடர்பாக பெற்றோருக்கு தெரிய வந்துள்ள நிலையில் குறித்த காதலன் வெளிநாடு சென்றுள்ளார்.

அதன் பின்னர் வெளிநாடு சென்ற காதலன் பல தீய பழக்கத்தில் ஈடுபட்டிருப்பதாக காதலிக்கு தெரியவந்ததையடுத்து அவருடன் வாழ முடியாது என விவாகரத்து கோரி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

இதனையடுத்து வெளிநாடு சென்றுள்ள காதலனுக்குப் பதிலாக அவரது சகோதரி நீதிமன்றில் ஆஜராகி வழக்கு விசாரணை இடம்பெற்று வந்த நிலையில் வெளிநாட்டில் இருந்து காதலன் திரும்ப நாட்டுக்கு வந்து வழக்குக்கு நீதிமன்றில் ஆஜராகி 3 தவணைக்கு சென்று வழக்கு விசாரணை நடைபெற்று வந்துள்ளது.

இந்த நிலையில் சம்பவ தினமான கடந்த 19 ஆம் திகதி குறித்த வழக்கு விசாரணைக்கு காதலி அவரது சகோதரி மற்றும் உறவினர்களுடன் சென்றுள்ளார். இதேவேளை காதலன் அவரது சகோதரி மற்றும் ஒரு குழுவினருடன் சென்று நீதிமன்ற பகுதிக்கு வெளியில் காத்து நின்றபோது நீதிமன்றத்துக்குள் காதலியும் காதலனும் சென்று வழக்கு விசாரணையின் பின்னர் அங்கிருந்து திருப்பி வெளியே வந்து வீதிக்கு வரும் போது அங்கு வைத்து காதலியை காதலனின் சகோதரி திடீரென அவரின் வாயை பிடித்து பொத்திக் கொண்டார். இதன்போது காதலன் காதலியை இழுத்து சென்று ஓட்டோவில் ஏற்றிய போது அங்கிருந்த காதலியின் உறவினர் ஒருவர் உடனடியாக ஓட்டோ மீது பாய்ந்து அவரை காப்பாற்ற முற்பட்ட போது ஓட்டோ அவரை சுமார் 50 மீற்றர் தூரம் இழுத்து சென்று அங்கு தள்ளி விட்டுவிட்டு கடத்திச் சென்றதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பில் பெண்ணின் சகோதரி மட்டு. தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# பொது போக்குவரத்தை சீரமைக்க கல்முனையில் கலந்துரையாடல்

கல்முனை, ஒக. 23

பொதுப்போக்குவரத்தை கல்முனை மாநகரத்தினுள் சீரமைப்பது தொடர்பிலான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலானது கல்முனை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் இப்னு அன்சார் பங்கேற்புடன் நடைபெற்றது.

இதன்போது கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பல்வேறு வீதிகளில் உள்ள அனுமதியற்ற வியாபார நிலையங்கள், வீதியின் இரு மருங்குகளில் அமைந்துள்ள தற்காலிக கடைகள் மற்றும் பாதுகாப்பற்ற முறையில் வீதியில் வைத்து விற்பனை செய்யும் நபர்கள் சம்பந்தமாக விரிவாக ஆராயப்பட்டன.

கல்முனை மாநகரில் பொதுப் போக்குவரத்து சீரின்மை, கட்டாக்காலிகளின் தொல்லை தொடர்பில் தொடர்ந்தும் பொதுமக்களாலும் முறைப்பாடுகள் வந்தவண்ணம் உள்ளன. இது தவிர பாடசாலை அதிபர்களாலும் இது சம்பந்தமாக பொலிஸாருக்கு முறைப்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும், இவ்விடயம் சம்பந்தமாகவும் உரிய வியாபாரிகளிடம் அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டுள்ளதுடனன் இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்து இவற்றை அகற்றும் முன் ஆலோசனை மற்றும் கருத்துக்கள் என்பன இக்கலந்துரையாடலில் முன்னெடுக்கப்பட்டன.

மேலும் இந்தக் கலந்துரையாடலின் போது கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பிரதான வீதிகளில் வாகன போக்குவரத்து மற்றும் நடமாட்டத்துக்கு இடையூறு ஏற்படுத்தும் வியாபாரிகளை கைது செய்து சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தல், வியாபாரப் பொருட்கள் மற்றும் வியாபார தளங்களின் விளம்பர பலகைகளை வீதிகளில் வைத்து பொதுப் போக்குவரத்தை தடுப்பதற்கான சட்ட திட்டங்களை நடைமுறைப்படுத்தல், வாகனங்களை நீண்ட நேரமாக வீதிகளில் இரு மருங்கிலும் நிறுத்தி வைத்தல் மற்றும் வீதிகளில் வைத்து வாகனங்களை திருத்த வேலை செய்யும் நபர்களை இனங்கண்டு சட்ட நடவடிக்கை எடுத்தல், உணவுப் பொருட்களையும் மற்றும் பழ வகைகளையும் பாதுகாப்பற்ற முறையில் திறந்த நிலையில் விற்பனை செய்பவர்களை இனங்கண்டு வழக்குப் பதிவு செய்தல்,

கால் நடைகளை பாதுகாப்பற்ற நிலையில் வீதிகளில் நடமாட விடும் உரிமையாளர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுதல், உணவகங்களின் ஊடாக வெளியேற்றும் கழிவு நீரினை வீதிகளில் விடும் உணவக உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல் குறித்தும் ஆராயப்பட்டன.

இவ்வாறான குற்றச் செயல்களை தொடர்ச்சியாக செய்து வருவதால் பொதுமக்கள் பல வகையான சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எனவே, இத்தகைய செயல்பாடுகளிலிருந்து தவிர்ந்து கொள்ளுமாறும் பொதுமக்கள் சிரமங்கள், அசௌகரியங்கள் இன்றி பயணிப்பதற்கும் உரிய முறையில் செயல்படுமாறு பொலிஸார் கேட்டுக்கொண்டனர். (எ-01)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

574 ட்ரோன்கள் மற்றும் 40 ஏவுகணைகளை ஏவி

# உக்ரைன் மீது மிகப்பெரிய தாக்குதல் நடத்திய ரஷ்யா

கீவ், ஒக. 23

**574 ட்ரோன்கள் மற்றும் 40 ஏவுகணைகளை ஏவி உக்ரைன் மீது ரஷ்யா மிகப்பெரிய தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு உக்ரைன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.**

உலகின் மிகப்பெரிய இராணுவக் கூட்டமைப்பான நேட்டோவில் இணைய உக்ரைன் முயன்று வருகிறது. இதற்கு தொடக்கம் முதலே ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்தது.

அதனைப் பொருட்படுத்தாததால் உக்ரைன் மீது 2022இல் ரஷியா போர் தொடுத்தது. மூன்றரை ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் போர் நீடித்து வருகிறது. போரை நிறுத்துவதற்கு அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், ரஷ்ய ஜனாதிபதி புடின், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மற்றும் ஐரோப்பிய நாடுகளின் தலைவர்களுடன் அலாஸ்காவில் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது போரில் கைப்பற்றிய பகுதிகளை திரும்பத் தர முடியாது என புடின் கூறினார். இதற்கு உக்ரைன் சம்மதிக்க வில்லை. இதனால் போர் நிறுத்தம் தொடர்பான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதனையடுத்து உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா மேலும் தீவிரப்படுத்தியது. இதன்படி நேற்று முன்தினம் ஒரேநாளில் உக்ரைன் மீது 574 ட்ரோன்கள் மற்றும் 40 ஏவுகணைகளை ரஷ்யா ஏவியுள்ளது.

போர் தொடங்கிய பிறகு இதுவரை நடத்தப்பட்ட மிகப் பெரிய தாக்குதல் இதுவாகும். இந்தத் தாக்குதலில் லிவிவ், முகாசெவோ, டிரான்ஸ்கார்பதியா ஆகிய நகரங்களில் உள்ள பல கட்டடங்கள், தொழிற்சாலைகள் சேதமடைந்தன. இதில் 15 பேர் படுகாயமடைந்தனர். இந்தத் தாக்குதலுக்கு உக்ரைன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. (எ)

# அக்னி 5 ஏவுகணை சோதனை வெற்றி

## 5000 கிலோ மீற்றர் தூரம் சென்று இலக்கை தாக்கும் திறன் படைத்தது

புதுடில்லி, ஒக. 23

கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி -5 ஏவுகணை, இந்தியாவின் ஒடிசாவில் உள்ள சண்டிபூர் பரிசோதனை மையத்திலிருந்து வெற்றிகரமாக பரிசோதனை செய்யப்பட்டது.

நாட்டின் பாதுகாப்புக்காக பல வகை ஏவுகணைகளை இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டு மையம் உருவாக்கி வருகிறது. அவற்றில் மிகவும் சக்தி வாய்ந்தது அக்னி-5 ஏவுகணை. அணு ஆயுதங்களுடன் 5000 கிலோ மீற்றர் தூரம் சென்று இலக்கை தாக்கும் திறன் படைத்தது.

இந்த ஏவுகணை ஒடிசாவின் சண்டிப்பூரில் உள்ள பரிசோதனை மையத்தில் பரிசோதிக்கப்பட்டது. அப்போது ஏவுகணையின் அனைத்து தொழில்நுட்ப செயல்பாடுகளும் சரிபார்க்கப்பட்டன. இந்த சோதனை வெற்றிகரமாக நடைபெற்றதாக பாதுகாப்புத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. அடுத்ததாக 7500 கிலோ மீற்றர் தூரமுள்ள இலக்கை தாக்கும் வகையில் அக்னி ஏவுகணையை மேம்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ளது.

அக்னி - 5 ஏவுகணையை இந்தியா மீண்டும் வெற்றிகரமாக சோதித்தது பாகிஸ்தானில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. அங்குள்ள எஸ்.வி.ஐ. (போர் உத்தி தொலைநோக்கு மையம்) என்ற சிந்தனை அமைப்பு பாகிஸ்தான் பிரதமர் ஷெரீப் மற்றும் இராணுவத் தளபதி அசிம் முனீர் ஆகியோருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. (எ)

இந்தியா - ரஷ்யா இடையே

# வர்த்தகப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை



மொஸ்கோ, ஒக. 23

இந்தியா - ரஷ்யா இடையேயான வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்றும் வர்த்தக பற்றாக்குறையை விரைவாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, 2030இற்குள் 100 பில்லியன் டொலர் இலக்கை நோக்கி முன்னேற வேண்டும் என்றும் அவர் கூறினார்.

வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம், கலாசார ஒத்துழைப்புக்கான இந்தியா - ரஷ்யா அரசுகளுக்கு இடையேயான ஆணைக்குழுவின் 26ஆவது கூட்டம் மொஸ்கோவில் நடைபெற்றது.

இந்தியப் பொருட்களுக்கு அமெரிக்கா 50 சதவீதம் இறக்குமதி வரி விதித்ததை அடுத்து, பிற நாடுகளுடனான வர்த்தக உறவை மேலும் வலுப்படுத்தும் முயற்சியை மத்திய அரசு தீவிரப்படுத்தியுள்ளது. இந்தப் பின்னணியில், மொஸ்கோவில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றிய அமைச்சர் ஜெய்சங்கர், "இந்தியா - ரஷ்யா இடையேயான உறவு தொடர்ந்து வலுவடைந்து வருகிறது. 2021இல் 13 பில்லியன் டொலராக இருந்த இந்திய - ரஷ்ய வர்த்தகம், 2024 - 25இல் 68 பில்லியன்டொலராக அதிகரித்துள்ளது.

அதேநேரத்தில், வர்த்தக பற்றாக்குறையும் அதிகரித்துள்ளது. 2021இல் 6.6 பில்லியன் டொலராக இருந்த வர்த்தக பற்றாக்குறை தற்போது கிட்டத்தட்ட 59 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. இந்தியா அதிக வர்த்தகம் செய்வதற்கு ஏற்ப ரஷ்யா தனது சந்தையை இன்னும் அகலமாக திறக்க வேண்டும். அதிக வர்த்தகத்தில் ஈடுபடுவதும் அதற்காக நாம் அதிகமாகச் செய்வதும் நமது மந்திரமாக இருக்க வேண்டும். 2030இற்குள் 100 பில்லியன் டொலர் இலக்கை நோக்கி விரைவாக முன்னேற வேண்டும்"- என்றார். (எ)

# உக்ரைன் பாதுகாப்புக்கான பொறுப்பை ஐரோப்பிய நாடுகளே சுமக்க வேண்டும்

## அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே. டி. வான்ஸ்

வாஷிங்டன், ஒக. 23

உக்ரைன் பாதுகாப்புக்கான பொறுப்பை இனி ஐரோப்பிய நாடுகள் தான் சுமக்க வேண்டியிருக்கும் என்று அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் - ரஷ்யா இடையே மூன்றரை ஆண்டு காலமாக நீடிக்கும் போரை நிறுத்த அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் முயன்று வருகிறார். இதன் நிமித்தமாக அவர் ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஜெலன்ஸ்கி ஆகிய இருவரையும் தனித்தனியாக அழைத்துப் பேசியுள்ளார். இந்த நிலையில், உக்ரைன் பாதுகாப்புக்கான பொறுப்பை இனி ஐரோப்பிய நாடுகள் தான் சுமக்க வேண்டியிருக்கும் என்று ஜே.டி.வான்ஸ் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவிடமிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளைச் சார்ந்துள்ளது உக்ரைன். மூன்றரை ஆண்டுகளாக போர் நீடிக்கும் நிலையில், இனி உக்ரைனுக்கு வான்வழி பாதுகாப்பில் மட்டுமே உதவி என்று ட்ரம்ப் திட்டவட்டமாக தெரிவித்துவிட்டார். கீவ் (உக்ரைன் தலைநகர்) பாதுகாப்புக்காக இனியும் அமெரிக்கா நிதியுதவி வழங்கிக் கொண்டிருக்காது என்று தெரிவித்துவிட்டார். இனி ஐரோப்பிய கூட்டாளிகள் தான் உக்ரைன் பாதுகாப்புக்கான சுமைகளை பெருமளவில் சுமக்க வேண்டும் என்ற முடிவுக்கும் ட்ரம்ப் வந்துவிட்டார் என வெள்ளை மாளிகை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளும் ஒரு கூட்டமைப்பை உருவாக்கியுள்ளன. அதில், உக்ரைனுக்கு ஆயுத உதவி செய்ய விரும்பும் நாடுகள் இணையலாம் என்று தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலில் புதன்கிழமை



பாக்ஸ் நியூஸ் செய்தி நிறுவனத்துக்கு பேட்டியளித்த அமெரிக்க துணை ஜனாதிபதி ஜே.டி. வான்ஸ், "போரின் சுமையை முழுக்க முழுக்க நாங்களே சுமக்கத் தேவையில்லை என்று நினைக்கிறேன். இதில் ஐரோப்பா தான் பிரதானமான பங்குதாரராக இருக்க வேண்டும் என்பதில் ஜனாதிபதி ட்ரம்ப் தெளிவாகவுள்ளார். இனி என்ன நடந்தாலும் ஐரோப்பிய நாடுகள் தான் உக்ரைன் பாதுகாப்பில் பெரும் பங்கை சுமக்க வேண்டும். உக்ரைன் ஐரோப்பிய கண்டத்தில் தான் உள்ளது. எனவே அது அவர்களின் பாதுகாப்பும் சார்ந்தது." என்றார். (எ)

# காஸா நகரை கைப்பற்ற இஸ்ரேல் கடும் தாக்குதல்

காஸா, ஒக. 23

காஸா நகரை கைப்பற்ற இஸ்ரேல் கடும் தாக்குதலை தொடங்கியது.

புறநகர்ப் பகுதிகளை ஏற்கனவே தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் இராணுவம் தெரிவித்துள்ளது.

பலஸ்தீனத்தின் காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினர் மீது இஸ்ரேல் போர் தொடுத்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் காஸாவில் குழந்தைகள், பெண்கள் உட்பட 62 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பலியாகினர்.

இந்த நிலையில் காஸாவின் முக்கிய நகரான காஸாசிற்றியை கைப்பற்றும் திட்டத்துக்கு இஸ்ரேல் அமைச்சரவை சமீபத்தில் ஒப்புதல் அளித்தது. இந்த நிலையில் காஸா சிற்றி முழுவதையும் கைப்பற்ற திட்டமிட்டு தரைவழித் தாக்குதலின் முதற்கட்ட நடவடிக்கைகளை தொடங்கியுள்ளதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது. (எ)

# இந்திய விமானங்களுக்கு தடை நீடிப்பு

இஸ்லாமபாத், ஒக. 23

இந்திய விமானங்கள் தங்கள் நாட்டு வான்பரப்பை பயன்படுத்த செப்ரெம்பர் 23 ஆம் திகதி வரை பாகிஸ்தான் அரசு தடை விதித்துள்ளது.

பஹல்காம் தாக்குதலை அடுத்து சிந்து நதி நீரை இந்தியா நிறுத்தியது.

இதற்குப் பதிலடியாக பதிவு செய்யப் பட்ட இந்திய விமானங்களும் இந்திய விமான நிறுவனங்கள் சார்பில் இயக்கப்படும் விமா னங்கள் என இந்தியத் தொடர்பு கொண்ட அனைத்து விமானங் களுக்கும் பாகிஸ்தான் தடை விதித்தது.

இந்தத் தடை மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. (எ)

# காஷ்மீரில் மேகவெடிப்பால் பெருவெள்ளம்: 68 பேர் பலி!

புதுடில்லி, ஒக. 23

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரின் கிஷ்துவார் மாவட்டம் சசோட்டி என்ற கிராமத்தில் கடந்த 14ஆம் திகதி மேகவெடிப்பு காரணமாக பெருவெள்ளம் ஏற்பட்டது.

இதில் சசோட்டி கிராமத்தின் பெரும் பகுதி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது.

பலர் உயிருடன் மண்ணில் புதையுண்டனர்.

இந்த நிலையில் மேலும் 4 பேரின் உடல்கள் மற்றும் துண்டிக்கப்பட்ட இரு கால்கள் மீட்கப்பட்டதை தொடர்ந்து உயிரிழந்தோர் எண்ணிக்கை 68 ஆக அதிகரித்தது.

வெள்ளத்தில் காயமடைந்தவர்கள் 30 கிலோ மீற்றர் தொலைவில் அத்தோலியில் உள்ள மாவட்ட துணை மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இங்குள்ள மருத்துவர்கள் கூறுகையில், "வெள்ளம் முற்றிலும் வடிந்துள்ளதால் இறந்தவர்களின் உடல் பாகங்கள் ஆங்காங்கே தென்படுகின்றன. முழுமையான உடல் கிடைத்தால் உறவினர்கள் அதனை கொண்டுசென்று இறுதிச் சடங்குகள் செய்ய முடியும். ஆனால் கை, கால்கள் என தனித்தனியாக கிடைக்கின்றன. எனவே இவற்றை டிஎன்ஏ பரிசோதனைக்காக நாங்கள் ஜம்முவுக்கு அனுப்பி வருகிறோம்" - என்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஓபின் ரென்னிஸ்

# கலப்பு இரட்டையர் பிரிவில் ஆண்ட்ரியா ஜோடி சம்பியன்

நியூயோர்க், ஓக. 23

அமெரிக்க ஓபின் ரென்னிஸ் கலப்பு இரட்டையர் பிரிவில் ஆண்ட்ரியா வவாசோரி ஜோடி சம்பியனானது.

அமெரிக்க ஓபின் ரென்னிஸ் போட்டி எதிர்வரும் 24ஆம் திகதி நியூயோர்க்கில் தொடங்குகிறது. இதன் ஒரு பகுதியான கலப்பு பிரிவு போட்டிகள் இந்த முறை தனியாக நடத்தப்பட்டது. இரு நாட்கள் நடைபெற்ற இந்தப் போட்டியின் இறுதிப்போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் இத்தாலியின் சாரா எர்ரானி-ஆண்ட்ரியா வவாசோரி ஜோடி, போலந்தின் இகா ஸ்வியாடெக், நோர்வேயின் கேஸ்பர் ரூட் ஜோடியை எதிர்கொண்டது.

இதில், தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்தி அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஆண்ட்ரியா வவாசோரி ஜோடி 6-3, 5-7, 10-6 என்ற செற் கணக்கில் கேஸ்பர் ரூட் ஜோடியை வீழ்த்தி சம்பியன் பட்டத்தை வென்றது. சம்பியன் பட்டம் வென்ற ஆண்ட்ரியா வவாசோரி ஜோடி இலங்கை மதிப்பில் சுமார் 30 கோடி ரூபாய் பரிசுத்தொகையை தட்டிச் சென்றது. (எ)



## சிம்பாவே தொடருக்கான இலங்கை அணி அறிவிப்பு



கொழும்பு, ஓக. 23

சிம்பாவேக்கு எதிரான ஒருநாள் தொடரில் பங்கேற்கும் இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி, சிம்பாவேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 2 போட்டிகள் கொண்ட ஒரு நாள் மற்றும் 3 போட்டிகள் கொண்ட ரி - 20 தொடரில் விளையாடவுள்ளது. இதில் இவ்விரு அணிகளுக்கும் இடையே முதலில் ஒருநாள் தொடர் நடைபெறவுள்ளது. இதன்படி இவ்விரு அணிகளுக்கும் இடையேயான முதல் ஒருநாள் போட்டி செப்ரெம்பர் 19ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் இந்தத் தொடருக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சரித் அசலங்கா தலைமையிலான இந்த அணியில் வனிந்து ஹசரங்க காயம் காரணமாக இடம்பெறவில்லை.

இலங்கை அணி விவரம் பின்வருமாறு:- சரித் அசலங்கா, பதும் நிஸ்ஸங்க, நிஷான் மதுஷ்கா, குசல் மெண்டிஸ், சதீர சமரவிக்ரம, நுவனிது பெர்னாண்டோ, கமிந்து மெண்டிஸ், ஜனித் லியனகே, பவன் ரத்நாயக்கே, துனித் வெல்லாலகே, மிலன் ரத்நாயக்கே, மஹீஸ் தீக்சனா, ஜெப்ரி வான்டர்சே, அஷித்த பெர்னாண்டோ, துஷ்மந்த சமீரா, டில்ஷான் மதுஷங்க ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (எ)

## மகளிர் உலகக் கிண்ணம்: இங்கிலாந்து அணி அறிவிப்பு




லண்டன், ஓக. 23

மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணத்துக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

13ஆவது மகளிர் ஒருநாள் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி (50 ஓவர்) அடுத்த மாதம் 30ஆம் திகதி முதல் நவம்பர் 2ஆம் திகதி வரை இந்தியா மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ளது. இதில் இலங்கை, இந்தியா, நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூசிலாந்து, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, பங்களாதேஷ் ஆகிய 8 அணிகள் களம் காணுகின்றன.

இவை தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் முதல் 4 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்குள் நுழையும். தொடக்க ஆட்டத்தில் இந்தியா- இலங்கை அணிகள் மோதுகின்றன.

இந்த நிலையில் இந்தத் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. நாட் ஸ்கைவர்-பிரண்ட் தலைமையிலான அந்த அணியில் 15 வீராங்கனைகள் இடம்பெற்றுள்ளனர்.

இங்கிலாந்து அணி விவரம்: நாட் ஸ்கைவர்-பிரண்ட், எம். ஆர்லாட், ரொமி பியூமண்ட், லாரன் பெல், அலைஸ் கேப்ஸி, சார்லி டீன், சோபியா டங்க்லி, சோபி எக்லெஸ்டோன், லாரன் பைலர், சாரா க்ளென், எமி ஜோன்ஸ், ஹீதர் நைட், எம்மா லாம்ப், லின்சி ஸ்மித், டேனி வயட்-ஹாட்ஜ். இங்கிலாந்து அணி தொடக்க ஆட்டத்தில் தென்னாபிரிக்காவுடன் விளையாடவுள்ளது. (எ)

## ஒருநாள் கிரிக்கெட் தரவரிசை கேசவ் மகராஜ் முதலிடம்




டுபாய், ஓக. 23

ஒருநாள் கிரிக்கெட் போட்டி பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை வெளியிட்டுள்ளது. இதில் தென்னாபிரிக்க அணியின் சுழற்பந்து வீச்சாளர் கேசவ் மகராஜ் முதலிடம் பிடித்துள்ளார்.

அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் தென்னாபிரிக்க அணி 98 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த ஆட்டத்தில் கேசவ் மகராஜ் 5 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார்.

இதன் மூலம் தரவரிசையில் 687 புள்ளிகளுடன் 2 இடங்கள் முன்னேறி முதலிடத்தை அடைந்துள்ளார். கடந்த 2023ஆம் ஆண்டு நவம்பர், டிசெம்பருக்கு பிறகு தரவரிசையில் கேசவ் மகராஜ் முதலிடத்துக்கு முன்னேறியுள்ளார். இலங்கை அணியின் மஹீஷ் தீக்ஷனா, இந்தியாவின் குல்தீப் யாதவ் ஆகியோர் தலா ஓர் இடங்கள் பின்தங்கி முறையே 2 மற்றும் 3ஆவது இடங்களில் உள்ளனர். முதல் 10 இடங்களில் குல்தீப் யாதவை தவிர இந்திய வீரர்களில் ரவீந்திர ஜடேஜாவும் இடம் பெற்றுள்ளார். அவர் 616 புள்ளிகளுடன் 9ஆவது இடத்தில் உள்ளார்.

பாகிஸ்தான் அணிக்கு எதிரான கடைசி ஒருநாள் போட்டியில் 18 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்களை வீழ்த்திய மேற்கு இந்திய தீவுகள் அணியின் ஜெய்டன் சீல்ஸ் தரவரிசையில் 15 இடங்கள் முன்னேறி 18ஆவது இடத்தை பிடித்துள்ளார். துடுப்பாட்ட தரவரிசையில் இந்திய அணியின் நட்சத்திரமான சுப்மன் கில் 784 புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். ஸ்ரேயஸ் ஐயர் 6ஆவது இடத்தில் உள்ளார்.

ரி - 20 துடுப்பாட்ட வீரர்கள் தரவரிசையில் இந்தியாவின் அபிஷேக் சர்மா, திலக் வர்மா முதல் இரு இடங்களில் உள்ளனர். அணித் தலைவர் சூர்யகுமார் யாதவ் 6ஆவது இடத்திலும், யஷஸ்வி ஜெய்ஸ்வால் 10ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர். தென்னாபிரிக்க அணியின் டெவால்ட் பிரேவிஸ் 9 இடங்கள் முன்னேறி 12ஆவது இடத்தை அடைந்துள்ளார். (எ)

## தலைவர் பதவியிலிருந்து ரோஹித் சர்மா விலகல்?

மும்பை, ஓக. 23

ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவர் பதவியிலிருந்து ரோஹித் சர்மா விலகவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவரான ரோஹித் சர்மா கடந்த ஆண்டு ரி - 20 உலகக் கிண்ணத்தை வென்ற பிறகு, சர்வதேச ரி - 20 போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தார். இதன் பின், இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு முன்பாக யாரும் எதிர்பாராத விதமாக டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்து அதிர்ச்சியளித்தார். இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அவரை தெரிவு செய்ய பி.சி.சி.ஐ. விரும்பவில்லை என்று தகவல்கள் வெளியான நிலையில் ஓய்வு அறிவித்து அதிர்ச்சி அளித்தார்.

இதனையடுத்து ஒருநாள் போட்டிகளில் மட்டுமே தொடர்ந்து விளையாடவுள்ள அவர் அடுத்த உலகக் கிண்ண தொடர் (2027) வரை விளையாடுவதை இலக்காக கொண்டுள்ளார். இருப்பினும் ஒருநாள் உலகக் கிண்ணம் வரை அவரால் விளையாட முடியுமா? என்பது சந்தேகம்தான். அத்துடன் அடுத்த ஒருநாள் உலகக் கிண்ணத்துக்கு முன் ரோஹித் சர்மா 40 வயதை எட்டி விடுவார் என்பதால் அவர் உலகக் கிண்ணப் போட்டிக்கான அணியில் இடம் பிடிப்பது கடினம் என பல முன்னாள் வீரர்கள் கூறியுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முன்னாள் ஜனாதிபதி...

திணைக்களத்தினரால் கைது செய்யப்பட்டார்

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பாக விசாரணை நடத்துவதற்காக அவர் திணைக்களத்துக்கு அழைக்கப்பட்ட போது இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அதன்படி, ரணில் விக்கிரமசிங்க பிற்பகல் 03.00 மணியளவில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இலங்கை வரலாற்றில் முன்னாள் ஜனாதிபதி ஒருவர் கைது செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது பதவிக் காலத்தில், 2023 செப்ரெம்பர் 22 மற்றும் 23 ஆகிய திகதிகளில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையில் கலந்து கொள்வதற்காக அமெரிக்காவின் நியூயோர்க் சென்றிருந்தார்.

சுற்றுப்பயணத்தை முடித்து நாட்டுக்குத் திரும்புவதற்கு முன்பு, முன்னாள் ஜனாதிபதி தனது மனைவி மைத்ரி விக்கிரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் கலந்து கொள்ள லண்டன் சென்றிருந்தார்.

இங்கிலாந்தின் வோல்வர்ஹாம்டன் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் ஜான் ராப்டர், லண்டனில் உள்ள இலங்கை தூதரகம் மூலம் முன்னாள் ஜனாதிபதி மற்றும் அவரது மனைவிக்கு அதிகாரபூர்வமாக அழைப்பிதழ் வழங்கியிருந்தார்.

இருப்பினும், முன்னாள் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட சுற்றுப்பயணத்தின் போது அரசாங்க நிதியைத் தவறாகப் பயன்படுத்தியதாகக் கூறி ஒரு நபர் சமீபத்தில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முறைப்பாடு அளித்ததாக பொலிஸ் தெரிவித்துள்ளது.

அதன்படி, விசாரணை தொடங்கப்பட்டு, முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏகநாயக்க மற்றும் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட உதவியாளர் சாண்ட்ரா பெரேரா ஆகியோரிடமிருந்து சமீபத்தில் அந்தத் திணைக்களம் வாக்குமூலங்களைப் பதிவு செய்தது.

அதைத் தொடர்ந்து, விக்கிரமசிங்கவை நேற்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, அவர் நேற்று காலை 9.00 மணியளவில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜரானார்.

சுமார் 4 மணி நேரம் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர், முன்னாள் ஜனாதிபதி பிற்பகல் 1.15 மணியளவில கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

அந்த நேரத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட அவரது ஆதரவாளர்கள் பலர் நீதிமன்ற வளாகத்திற்கு வந்திருந்தனர்.

அதன்படி, கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட முன்னாள் ஜனாதிபதி தொடர்பான சட்ட நடவடிக்கைகள் கோட்டை நீதவான் நிலுபுலி லங்காபுர முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர் மாலை 5.30 மணியளவில் நீதவான் வழக்கு தொடர்பான உத்தரவை அரை மணித்தியாலத்திற்கு ஒத்திவைத்து உத்தரவிட்டார்.

எனினும், பின்னர் நீதிமன்ற அறை வளாகத்தில் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், நேற்று இரவு அவரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

சந்தேகநபரான முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது, முறைப்பாட்டாளர் தரப்பு சார்பாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் விளக்கமளித்தார். வி.எஸ். கருணாரத்ன என்ற நபர் 17.03.2025 அன்று ஜனாதிபதியிடம் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து ஜனாதிபதி செயலகத்தில் உள்ளக விசாரணை நடத்தப்பட்டதாகவும், பின்னர் 23.05.2025 அன்று ஜனாதிபதியின் செயலாளரால் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு அளிக்கப்பட்டதாகவும் மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக இருந்த காலத்தில், 13.09.2023 முதல் 20.09.2023 வரை கியூபா மற்றும் அமெரிக்காவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்ட பின்னர், 22 மற்றும் 23.09.2023 ஆகிய திகதிகளில் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்வதாகக் கூறி தனிப்பட்ட பயணத்தில் ஈடுபட்டதன் மூலம் அரசாங்க நிதியை முறைகேடாகப் பயன்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அதன்படி, தொடர்புடைய சம்பவம் தொடர்பாக 33 சாட்சிகளிடம் வாக்குமூலங்களைப் பதிவு செய்த பின்னர், நாட்டின் 8வது நிறைவேற்று ஜனாதிபதியான ரணில் விக்ரமசிங்கவை சந்தேக நபராகப் பெயரிட்டு கைது செய்ததாக திலீப பீரிஸ் தெரிவித்தார். (அ)

## பயங்கரவாத...

குறுகிய காலப்பகுதியில் தனியான குழுவொன்று நியமிக்கப்பட்டது. அந்த குழு பல்வேறு சந்தர்ப்பங்களில் கூடியிருந்தது. திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு இந்த மாதத்திற்கு இறுதி செய்யப்பட்டு, செப்ரெம்பர் ஆரம்ப பகுதிக்குள் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கும் சட்டமூலத்தை வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

பயங்கரவாத தடைச்சட்டம் தற்போது அமுலில் உள்ளது. அந்த சட்டத்தின் ஊடாக இனம், மதம் என்ற அடிப்படையில் எவரும் கைது செய்யப்படவில்லை. மாறாக ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபடும் நபர்களை கைது செய்வதற்காக பயன்படுத்தப்படுகின்றது.

அந்த சட்டத்தை திருத்தம் செய்ய மற்றும் மாற்ற வேண்டிய அவசியம் உள்ளதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அதில் எவ்வித மாற்று கருத்தும் இல்லை. போதைப்பொருள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபடும் நபர்களை கைது செய்ய புதிய சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படும்-என்றார். (அ)

## தமிழரின்...

தமிழர்களுடைய பிரச்னை நீண்டது என தெரிவித்த அவர், சிங்களவர்களுடன் சேர்ந்து வாழ ஆசைப்படுவதாக தெரிவித்தார். (அ)

## செம்மணி...

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக 45 நாட்கள் வழங்கப்பட்ட நிலையில், 32 ஆவது நாளுடன் குறித்த அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

இதன்போது, 147 என்புக்கூடுகள் அடையாளப்படுத்தப்பட்டதுடன், 133 என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## காலில்...

பின்னர் மீண்டும் வீக்கம் ஏற்பட்ட நிலையில் கடந்த 14 ஆம் திகதி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (அ-05)

## சந்நிதியானுக்கு...

தினங்கள் பெருந்திருவிழா நடைபெறும். எதிர்வரும் 27ஆம் திகதி புதன்கிழமை முதல் காலை திருவிழா நடைபெறும். அன்றைய தினம் விநாயகப் பெருமானும் வேலவரும் இணைந்து வீதி உலா வருவர்.

சிறப்பு திருவிழாக்களான பூங்காவன திருவிழா எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி திங்கட்கிழமையும் மறுநாள் செவ்வாய்க்கிழமை கைலாச வாகன திருவிழாவும் நடைபெறும்.

தொடர்ந்து எதிர்வரும் செப்ரெம்பர் 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்கு சப்பை ரதத் திருவிழா மறுநாள் சனிக்கிழமை காலை 7 மணிக்கு தேர்த் திருவிழா, அடுத்தநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். மௌனத் திருவிழாவுடன் பெருந்திருவிழா நிறைவுறும். பெருந்திருவிழா பிரதம குருவாக சிவசிறீ சிவானந்த ஐயர் செல்லமணி ஐயர் விளங்குவார்.

சந்நிதியான் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு போக்குவரத்து ஏற்பாடுகள், குடிதண்ணீர் மற்றும் சுகாதார ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஐ-02)

## வடக்கு...

அமைச்சின் கீழ் இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் தொடர்பில் ஆராயும் மாதாந்தக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் கருத்துத் தெரிவித்த ஆளுநர், ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் அந்தந்த வலயக் கல்விப் பணிபாளர்களே பொறுப்பானவர்கள். வலயங்களில் காணப்படும் பாடசாலை அதிபர்களின் செயற்பாடுகள் அதிருப்தி அளிக்கும் வகையில் இருந்தால் அவர்களை மாற்றுவதற்குரிய நடவடிக்கைகளை கல்வி அமைச்சின் செயலாளர் ஊடாக மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் நன்றாக, அர்ப்பணிப்புடன் வேலை செய்யும் அதிபர்களை பாராட்ட வேண்டிய பொறுப்பும் கடப்பாடு வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு உள்ளது. அத்துடன் தமது கடமைகளை சரிவரச் செய்யாதவர் களை எச்சரித்து அதன் பின்னரும் அவர்கள் ஒழுங்காக செயற்படத் தவறினால் உரிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

ஒவ்வொரு பாடசாலைகளின் வளர்ச்சி அந்தந்த பாடசாலையின் அதிபரையே சாரும். எனவே அந்தந்த சமூகத்துக்கு உரிய பொறுப்புக்களை அந்தந்த பாடசாலை அதிபர்களே ஏற்க வேண்டும்.

ஒவ்வொரு வலியக் கல்வி பணிப்பாளர்களும் அடிக்கடி பாடசாலைகளுக்கு களப் பயணம் மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு செல்லுகின்ற பொழுது அங்கே காணப்படுகின்ற குறைபாடுகள் மற்றும் வளப் பங்கீடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் சில பாடசாலைகளில் தேவைக்கு மேலதிகமாக இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது. அவர்களை தேவை உள்ள பாடசாலைகளுக்கு உடனடியாக மாற்றம் செய்ய வேண்டும். வளப் பங்கீடுகளுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்களே பொறுப்பு. தங்களின் பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றாத வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஆளுநர் குறிப்பிட்டார்.

இதன் பின்னர் கல்வி அமைச்சு, கல்வித் திணைக்களம், விளையாட்டுத் திணைக்களம், கலாசார அலுவல்கள் பிரிவு என ஒவ்வொரு திணைக்களத்தினதும் முன்னேற்றம் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில், வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், பிரதிப் பிரதம செயலாளர் - நிதி, திட்டமிடல், கல்வி, விளையாட்டு, பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (அ)

## யாழில்...

துப்பாக்கிகள் 30 மற்றும் அவற்றுக்குரிய 5ஆயிரம் ரவைகள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த ஆயுதங்கள் பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (அ)

## சட்டம்....

நேற்று பாராளுமன்றத்தில் விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்ட போதே அமைச்சர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பொலிஸ்மா அதிபரா?, பிரதி பொலிஸ்மா அதிபரா? முன்னாள் ஜனாதிபதியா? என பதவிகளை பார்த்து எவருக்கும் எதிராக சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது. எவரேனும் தவறு செய்திருந்தால், அவர்களை சட்டத்தின் முன் நிறுத்தத் தயங்க போவதில்லை

அவ்வாறான தவறுகளை இழைத்தவர்களே தற்போது சட்டத்தின் முன் நிறுத்தப்படுகிறார்கள்

அரசாங்கம் நாட்டைக் பொறுப்பேற்ற போது, நாடு பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, சமூக ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் வங்குரோத்து நிலையை அடைந்திருந்தது.

அவ்வாறான சமூக பின்னடைவை எதிர்நோக்கியிருந்த போதே, தேசிய மக்கள் சக்தி நாட்டை பொறுப்பேற்றிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

8 முதல் 10 மாத காலத்திற்குள், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநாட்டியுள்ளார்.

ஏற்றுமதி வருவாய் தற்போது அதிகரித்துள்ளது. உள்நாட்டு வருவாய் அதிகரித்துள்ளது. பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சுற்றுலாத் துறை ஊக்குவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, நாட்டில் பொருளாதார ஸ்திரத்தன்மையை நிலைநாட்ட தற்போதைய அரசாங்கம் செயல்பட்டு வருகின்றது - என்றார். (அ)

## இன்றைய...

கலந்துகொண்டு உரையாற்றிய தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன், தமிழ் மக்கள் தனிநாட்டையோ, சமஷ்டியையோ கோரவில்லை என குறிப்பிட்டுப் பேசியிருந்தார்.

இந்நிலையில் அதனைத் தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதனின் இக்கருத்தைக் கண்டித்ததுடன், மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

இறுதியாக இங்கு ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். எமது மக்கள் தமிழீழம் வேண்டுமென்றே கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் வன்னி மாவட்டத்தைச் சார்ந்த அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் செல்லத்தம்பி திலகநாதன், எமது தமிழ் மக்கள் தனிநாட்டையோ, சம்ஷ்டித் தீர்வினையோ கேட்கவில்லை எனத் தவறான கருத்தினை இங்கே பதிவு செய்துள்ளார்.

அவரிடம் யாரும் தனிநாட்டையோ, சமஷ்டியையோ கேட்கவில்லை எனவும் குறிப்பிட்டுப் பேசினார். தமிழ் மக்கள் யாரும் அவரிடம் கேட்கமாட்டார்கள். அரசாங்கத்திடமே கேட்பார்கள். எமது மக்கள் பாராளுமன்ற உறுப்பினர் திலகநாதனைப் பற்றியும், அவருடைய செயற்பாடுகள் தொடர்பிலும் நன்கு அறிவார்கள். எனவே அவரிடம் போய் தனிநாட்டையோ, சமஷ்டியையோ கேட்கமாட்டார்கள் என்பதையும் இங்கு சுட்டிக்காட்டவிரும்புகின்றேன்.

ஒரு விடயத்தை இங்கு அழுத்தமாக கூறிவைக்க விரும்புகின்றேன். எமது தமிழ் மக்கள் எப்போதும் கேட்பது தமிழ் ஈழத்தைத்தான். ஆனால் தற்போதுள்ள சூழ்நிலை காரணமாகவே தமிழ் மக்கள் சமஷ்டியைக் கோருகின்றனர். அவ்வாறிருக்க இங்கு வந்து பிழையான கருத்துக்களை பதிவுசெய்வதை ஒருபோதும் எம்மால் ஏற்றுக்கொள்ளமுடியாது - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தாய்லாந்து முதலீட்டாளர்கள் வடக்கில் முதலிடவேண்டும்!

## அந்நாட்டு தூதுவரிடம் ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 23

உற்பத்திப் பொருட்களை பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதில் சிறப்பாகச் செயற்படும் தாய்லாந்து அது தொடர்பான அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதுடன், முதலீட்டாளர்களை இங்கு முதலீடு செய்வதற்கு ஊக்குவிக்கவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கேட்டுக்கொண்டார்.

இலங்கைக்கான தாய்லாந்து தூதுவர் பெய்ரூன் தலைமையிலான குழுவினர், ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடினர்.

தூதுக்குழுவினரை வரவேற்ற ஆளுநர், பொருட்களை பெறுமதிசேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதில் தாய்லாந்து முன்னணியில் உள்ளமையை சுட்டிக் காட்டினார். மிக நீண்ட கால அனுபவம் உள்ள தாய்லாந்து இது தொடர்பில் அனுபவங்களை பகிர்ந்து கொள்ளவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

வடக்கு மாகாணம் விவசாய மற்றும் கடலுணவு உற்பத்திகளில் போதிய திறனைக் கொண்டுள்ளபோதும் இரு துறைகளில் விலைத்தளம்பல் இருக்கின்றது என்று ஆளுநர் குறிப்பிட்டார். இதனால் விவசாயிகள் விவசாயத்தை கைவிடும் நிலைமையும் இருக்கின்றது என்றும் தெரிவித்தார். இதை மாற்றியமைப்பதற்கு உற்பத்திப் பொருட்கள் அதிகளவில் கிடைக்கப்பெறும்போது அதை பதப்படுத்துவதற்கோ அல்லது பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றுவதற்கோ உரிய வாய்ப்புக்கள் இல்லை என்பதை ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயத்தில் அனுபவமுள்ள தாய்லாந்து முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்வதன் ஊடாக



பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்ய முடியும் என ஆளுநர் குறிப்பிட்டார். இந்த விடயத்தை சாதகமாக அணுகுவதாக தூதுவர் பதிலளித்தார். அத்துடன் வேலை வாய்ப்பு தொடர்பான விடயத்தில், தாய்லாந்தில் பல இலங்கையர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது என்பதையும் குறிப்பிட்ட தூதுவர் வடக்கு மாகாண இளையோரும் அந்த வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும், சுற்றுலாத்துறை தொடர்பிலும் தாய்லாந்து தூதுவர் கவனம் செலுத்தினார். அதற்கான உட்கட்டுமானங்கள் தொடர்பிலும் ஆராய்ந்தார்.

வடக்கு மாகாணத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் முல்லைத்தீவு மாவட்டம் உள்ளமையை சுட்டிக்காட்டிய ஆளுநர், கடந்த கால போர் காரணமாக அந்த மாவட்டம் மேலெழுந்து வருவதில் இடர்பாடுகளை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டார். போதுமான வளங்கள் அந்த மாவட்டத்திலுள்ளபோதும் அதைப் பயன்படுத்திக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் குறைவாக உள்ளமையும் தெளிவுபடுத்தினார்.

# 20 நாட்களில் மட்டும் 146,755 சுற்றுலாவிகள்

கொழும்பு, ஓக. 23

கடந்த 20 நாட்களில் மட்டும் ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 755 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர் என்று இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதில், 33 ஆயிரத்து 588 பேர் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர்.

ஐக்கிய இராச்சித்திலிருந்து 15 ஆயிரத்து 726 பேரும் இத்தாலியிலிருந்து 10 ஆயிரத்து 501 பேரும், சீனாவிலிருந்து 9 ஆயிரத்து 299 பேரும் பிரான்ஸிலிருந்து 8 ஆயிரத்து 966 பேரும் ஜேர்மனியிலிருந்து 8 ஆயிரத்து 819 பேரும் நாட்டுக்கு வந்துள்ளனர்.

இதேசமயம், இந்த ஆண்டில் ஓகஸ்ட் 20ஆம் திகதி வரை 15 இலட்சத்து 15 ஆயிரத்து 43 சுற்றுலா பயணிகள் வருகை தந்துள்ளனர். (ஐ)

# போலி தொலைபேசி அழைப்புகள்; வர்த்தகர்கள் விழிப்புடன் இருக்கவும் நுகர்வோர் அதிகார சபை

கொழும்பு, ஓக. 23

பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அதிகாரி எனக்கூறி பணம் கோரும் போலி தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் பொதுமக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்துள்ளது.

வர்த்தகர்களுக்கு தொலைபேசி அழைப்பு விடுத்து அவர்களின் வர்த்தகத்தில் தவறுகள் இருப்பதாகக்கூறி, அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்காமல் இருக்க, தான் கூறும் வங்கி கணக்குக்கு பணத்தை பரிமாற்றம் செய்யுமாறு கோரும் தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இவ்வாறான போலி தொலைபேசி அழைப்புகள் தொடர்பில் ஏதேனும் தகவல்கள் கிடைத்தால் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் 1977 அல்லது 077 108 8922 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அறிவிக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# மாகாண சபைகள் தேர்தலை நடத்த உறுதிமொழி தாருங்கள்

## அரசிடம் கோரிய மனோ எம். பி.

கொழும்பு, ஓக. 23

மாகாண சபைகள் தேர்தலை உடனடியாக நடத்தும் உறுதிமொழியை இன்றாவது வழங்கவேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கோரியுள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

"இலங்கை ஒரு தனி சிங்கள பௌத்த நாடு அல்ல. பல மொழி, பல இனங்களைக் கொண்ட நாடு என்பதை ஏற்றுக்கொண்டால், இலங்கையர் என்ற வகையில் அனைவரும் முன்னோக்கிச் செல்லமுடியும் ", என்றும் அவர் இதன்போது குறிப்பிட்டார். (ஐ)

# தென்மராட்சி மாணவிக்கு ஜனாதிபதி அநுரவால் விருது



கொழும்பு, ஓக. 23

சுற்றாடல் முன்னோடி ஜனாதிபதி விருதை சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் ஆத்மிகா சனாதனன் பெற்றுக் கொண்டார்.

கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இந்த விருதை வழங்கி வைத்தார்.

தென்மராட்சி வலயத்தில் முதன்முறையாக ஜனாதிபதி விருதை இவர் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செல்வச்சந்நிதி கொடியேற்றம் இன்று மதியம் ஆலயச் சூழலில் சுகாதாரம் பேண அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஓக. 23

வரலாற்று சிறப்புமிக்க தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று சனிக்கிழமை மதியம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழாக்கள் நடைபெறவுள்ளன.

இந்நிலையில், ஆலய சூழலில் கடைப்பிடிக்கவேண்டிய பொதுச்சுகாதாரம் சார்ந்த பொது அறிவுறுத்தல்களை வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற பொதுச்சுகாதார பரிசோதகர் விடுத்துள்ளார்.

அவையாவன, உணவு கையாளும் நிலையங்கள் (உணவகங்கள், இனிப்பு கடைகள், மிக்சர் கடைகள், ஐஸ்கிறீம் கடைகள், கருஞ்சுண்டல், தும்புமிட்டாய், ஏனையவை) தத்தமது உள்ளூராட்சி சபைகளின் நடப்பாண்டுக்கான வியாபார அனுமதியை பெற்றிருத்தல் வேண்டும், உணவு கையாளும் நிலையங்களில் கடமைபுரிபவர்கள் மற்றும் அன்னதான மடங்களில் கடமை புரிபவர்கள் அனைவரும் நடப்பாண்டிற்கான மருத்துவ சான்றிதழ் வைத்திருப்பதுடன் தனிநபர் சுகாதாரம் பேணுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் தற்காலிக கடமையில் ஈடுபடுபவர்கள் தற்காலிக மருத்துவ சான்றிதழ் பெற வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தின் பொதுச் சுகாதார பரிசோதகரினை தொடர்பு கொள்ளவும்.

தண்ணீர்ப்பந்தல்கள், சர்பத் கடைகள் மற்றும் ஐஸ்கிறீம் கடைகள் நடாத்துபவர்கள் அனுமதி பெறப்பட்ட கடைகளில் நீர்ப்பரிசோதனை அறிக்கை வைத்திருப்பவர்களிடம் இருந்து ஐஸ் கட்டிகளை கொள்வனவு செய்வதுடன் அதற்கான பற்றுச்சீட்டையும் தம்வசம் வைத்திருத்தல் வேண்டும், ஆலயத்தினது சுற்றாடலில் புகையிலை சார்ந்த பொருட்களை விற்பனை செய்வதும் பயன்படுத்துவதும் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது, வர்த்தக நிலையங்கள், அன்னதான மடங்கள், தண்ணீர் பந்தல்களில் பயன்படுத்தப்படும் நீரானது குடிக்கத்தக்கது (நீர்ப்பரிசோதனை அறிக்கை) என்பதனை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் தவறும் பட்சத்தில் நகராட்சி மன்றத்தால் வழங்கப்படும் குடிநீரினை மாத்திரமே பெறப்பட வேண்டும்.

பொதுச்சுகாதாரம் சார்ந்த விடயங்கள் தொடர்பான ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகளை உற்சவ கால சுகாதார வைத்திய அதிகாரி பணிமணை நிலையத்தில் பெற்றுக்கொள்ள முடியும், வர்த்தக நிலையங்கள் மற்றும் மடங்களிலும் தண்ணீர் பந்தல்களிலும் இருந்து வெளியேறும் திண்ம கழிவுகளை குப்பைத்தொட்டி கொண்டு ஓரிடத்தில் சேகரிப்பதுடன் அதனை உரிய முறையில் அகற்றுவதனை உறுதிப்படுத்த வேண்டும், ஆலயச் சூழலில் பிளாஸ்திக் பாவனை முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

பச்சை குத்துதல் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது, காவடி குத்துபவர்கள் நகராட்சி மன்றத்தின் நடப்பாண்டுக்கான வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் தொற்றுநீக்கும் வசதியும் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும்.(உபகரணங்கள் கொதிநீரிலிட்டு தொற்றுநீக்கும் வசதிகள்), குத்தகைக்கு வழங்கப்படும் நிலங்கள் திருவிழா முடிவடைந்ததும் சுத்தமாக பேணப்படுவது ஆதன உரிமையாளரின் பொறுப்பாகும். ஆலய வளாகம் தவிர்ந்த தனியார் ஆதனங்களின் கழிவகற்றலை நகரசபை பொறுப்பேற்காது, பொதுச்சுகாதாரம் தொடர்பான சட்ட ஏற்பாடுகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அந்த அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

# கிளிநொச்சி அழகாபுரி வீதியை உடன் புனரமைத்து தரவேண்டும்

கிளிநொச்சி, ஓக. 23

கிளிநொச்சி- கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட இராமநாதபுரம்,அழகாபுரி கிராம வீதியை புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த கிராமத்தில் சுமார் 300 குடும்பத்துக்கு மேல் வசித்து வரும் நிலையில் பல வருட காலமாக இவ்வீதி கிரவல் வீதியாகவும் குண்டும் குழியுமாகவும் காணப்படுவதன் காரணமாக பாடசாலை செல்லும் மாணவர்கள் மற்றும் கர்ப்பவதி தாய்மார்கள், முதியவர்கள் தமது நாளாந்தச் செயல்பாட்டை முன்னெடுக்க முடியாத நிலை காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு, இந்த கிராமத்தில் வாழும் மக்கள் சுவாச நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அத்துடன், இந்தப் பகுதியில் உள்ள இயற்கை வளங்களும் முற்று முழுதாக அழிவடைந்து வருகின்றன.

எனவே, இந்த வீதியை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைவாக புனரமைத்து தரவேண்டும் என அவர்கள் கோரியுள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 23.08.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org